# 2023

# ஆண்டறிக்கை







## வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டெவலப்மென்ட் (தனியார்) கம்பனி

# இடங்களை வடிவமைத்து, வாழ்வை வளப்படுத்தல்

மாறுபடும் சந்தை நிலப்பரப்பை மெருகூட்டி வளர்ந்து வரும் போக்கைபின்பற்றி நாம் எமது திறனை நோக்கிப் பயணிப்பதில் உறுதியாக உள்ளோம். புத்தாக்கம், ஒருமிப்பு மற்றும் தழுவல் மீது கவனம் செலுத்தி எதிர்கால ஆதன விற்பனையில் எமது நிலைநாட்டலைத் தொடர்ந்து காண்பிப்போம்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| கம்பனியைப் பற்ற | 1 |
| தரக் கொள்கை | 3 |
| கம்பனி ஒரே பார்வையில | 4 |
| நிதிசார் முன்னிலைப்படுத்தல் | 5 |
| தலைவரின் செய்தி | 6 |
| பொது முகாமையாளரின் செய்தி | 7 |
| பணிப்பாளர் சபை | 8 |
| செயலாற்றல் மற்றும் பெறுமதி உருவாக்கலுக்கான வணிக மாதிரி | 10 |
| பங்குதாரின் ஈடுபாடு | 12 |
| முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும | 14 |
| மூலதன முகாமைத்துவம் | 15 |
| கூட்டமைப்பு ஆளுகை | 20 |
| கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் பங்கேற்பு நிலைக | 22 |
| பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை | 23 |
| சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 26 |
| இடர் முகாமைத்துவ அறிக்கை | 29 |
| சுயாதீனக் கணக்காய்வாளரின் அறிக்கை | 32 |
| நிதி அறிக்கைகள | 39 |
| பத்தாண்டு ஒரே நோக்கில | 75 |

# கம்பனியைப் பற்றி

வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டெவலப்மென்ட் (தனியார்) கம்பனி (ஓவீடிசி) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகார வரையறைக்குட்பட்ட மனை வணிக மேம்பாட்டில் ''ஆதன விருத்தியின் மிகச்சிறந்த நிலையில் விளங்க வேண்டும்'' எனும் தொலைநோக்குடன் 100% அரசாங்க நிறுவனமாக உள்ளது.

இந் நிறுவனம் 1996 இல் அன்றைய 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டமைக்கப்பட்டதாகும். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் (என்எச்டீஏ) நகர அபிவிருத்தி அதிகாரசபையும் (யூடீஏ) பிரதான பங்குதாரர்களாக உள்ளன. இதன் தற்போதைய பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு – 04, பம்பலப்பிட்டி, புகையிரத நிலைய வீதி இல. 25 ½ இல் உள்ள ''டவர் கட்டிடத்தில்'' உள்ளது. 2007 இல் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதுள்ள 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளிற்கு அமைவாக 2007 ஆம் ஆண்டின் போது கம்பனிகள் பதிவாளர் நாயகத்துடன் ஓவீடிசீ இன் பெயர் மற்றும் பங்கு வைப்புக்கள் மீள்பதிவு செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது.

ஓவீடீசி ஸ்தாபிக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னர், தற்போது பயன்படுத்தப்படும் டவர் கட்டிடத்தின் நிர்மாணிப்பை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டிருந்தது. நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகையில் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, இக் கட்டிட வேலையை நிறைவேற்றும் பணி நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

1993 ஆம் ஆண்டின் அமைச்சரவைக் குறிப்பாணையில் குறிப்பிட்டதற்கிணங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பக் கட்டுமானப் பணிகளுக்காக ரூபா 120,520,369 தொகையை முதலீடு செய்திருந்தது. அதே சமயம் நகர அபிவிருத்தி அதிகாரசபை கோபுரக் கட்டிடத்தை நிறைவு செய்வதற்காக ரூபா 92,672,321 தொகையை முதலீடு செய்திருந்தது. மேற்குறித்தவற்றைக் கருத்திற்கொண்டு கோபுரக் கட்டிடத்தை உரித்தைக்கொள்வதற்காகவும் எதிர்காலத்தில் இத்தகைய கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையையும் இணைந்து ஓர் கூட்டுமுயற்சியை உருவாக்குவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டது. இதற்கமைய ஓவீடீசீ நிறுவப்பட்டு ஒவ்வொரு தரப்பினரது பங்களிப்பு விகிதாசாரத்தில் மொத்த முதலீட்டின் விகிதாசாரத்தின் அடிப்படையில் அதன் பங்குகளை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஓவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான பங்குகளின் அடிப்படையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் முறையே 12 மில்லியன் பங்குகளையும் ரூபா 9.2 மில்லியன் பங்குகளையும் பெற்றிருந்தன.

நிறுவனத்தின் அகவிதிக்கமைவாக குறித்த முதன்மை நோக்கத்தை எய்துவதற்காக காணிகளையும் ஆதனங்களையும் கையகப்படுத்துதல், உரித்தாக்குதல், நிர்மாணித்தல், அபிவிருத்தி செய்தல், நிர்வகித்தல், வாடகைக்கு வழங்குதல், குத்தகைக்கு வழங்குதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற சொத்து மேம்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரச கொள்கைகளையும் சட்டரீதியான தேவைப்பாடுகளையும் பேணி, தமது அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றிக்காக ஆக்கபூர்வமான நிர்வாக முறை ஒன்றைத் தயாரித்து, சமூகப் பொறுப்புடன் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்வதற்கான ஓர் அமைப்பாக நிலவும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி வெற்றிகரமான முடிவை அடைவதற்காக முயற்சித்தல்.

இது வரையில், ''டிரீம் ஹவுஸ்'' - கஹதுடுவ (ஹரிதகெதில்ல), ''டிரீம் ஹவுஸ்'' – மத்தேகொட (ஹரிதகெதில்ல), பார்க் வீதி வீடமைப்புத் திட்டம் மற்றும் பல்லேகலே வீடமைப்புத்திட்டம் போன்ற செயற்திட்டங்களை வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டெவலப்மென்ட் (தனியார்) கம்பனி (ஓவீடிசி) வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ளது. தற்போது கஹதுடுவ செயற்திட்ட காணி மற்றும் வீடுகளின் விற்பனை இடம்பெற்றுவருவதுடன் தெல்கந்த இடப்பகுதி முதலீட்டாளர்களுக்காக எதிர்வரும் காலத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஓவீடிசி ஆல் எதிர்வரும் 10 வருடங்களிற்குள் கூட்டுத்திட்டத்திற்கு அமைவாக பம்பலப்பிட்டி ஓஷன் கோபுரம் 2 பெயர்கொண்ட முன்மொழிவுத் திட்டங்களும் ஆரம்பமாகும் நடைமுறையில் உள்ளது.



## எமது தொலைநோக்கு

“ஆதன விருத்தித் துறையில் மிகச்சிறந்த நிலையில் விளங்க வேண்டும்”

## எமது பணி

“எமது வாடிக்கையாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக உயர் மாற்றத்தின் மூலம் புத்தாக்கத்திலும் நடைமுறைப்படுத்தலிலும் இடைவிடாத கவனம் செலுத்தி சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதாகும்.”



# தரக் கொள்கை

வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டெவலப்மென்ட் (தனியார்) கம்பனி “ ஆதன விருத்தியின் மிகச்சிறந்த நிலையில் விளங்க வேண்டும்” எனும் தொலைநோக்குடன் 1994 ஆம் ஆண்டில் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் 2010 இல் மீள்பதிவுசெய்யப்பட்டது.

இதனை உறுதிப்படுத்துவதற்காக, நாம்,

- எமது சேவைத் தரம், மனை வணிக ஆதன அபிவிருத்தி, உற்பத்தித் திறன் மற்றும் கம்பனியின் ஒட்டுமொத்த நோக்கை எய்துவது தொடர்பாக கவனம் செலுத்துதல்.
- பங்குதாரர்களது தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நாம் எப்போதும் பூர்த்திசெய்தல்.
- எமது அனைத்துச் செயன்முறைகளிலும் செயற்திறனையும் வினைத்திறனையும் பராமரித்தல்.
- சட்ட மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்குதல்.
- சமூகப் பொறுப்புடன் கம்பனியை நிர்வகித்தல்.

இதனை மேற்கொள்வதில்

ஐஎஸ்ஓ 9001:2015

தர முகாமைத்துவ முறைமைக்கு நாம் உறுதியாக இணங்கி அதனை தொடர்ச்சியாக முன்னேற்றுகின்றோம்.

# கம்பனி ஒரே பார்வையில்


















# நிதிசார் ன்னிலைப்படுத்தல்

| திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | 2023 | 2022 |
|---|---|---|
| வருமானம் | 138,840,123 | 136,569,138 |
| மொத்த வருமானம் | 113,963,653 | 89,485,800 |
| நியாயப் பெறுமதி இலாபம் & காலக்கழிவு எதரீடுசெய்தல் | 193,813,550 | 391,419,086 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 225,919,819 | 413,544,071 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 205,199,028 | 409,564,924 |
| வரிக்கு முன்னரான தேறிய செயற்பாட்டு இலாபம் | 32,106,269 | 22,124,985 |
| **நிதி நிலைமைக் கூற்று** | | |
| மொத்தச் சொத்துக்கள் | 3,865,953,732 | 3,653,529,693 |
| முதலீட்டு ஆதனம் | 3,448,000,000 | 3,214,000,001 |
| மொத்தப் பொறுப்புகள் | 172,024,056 | 165,568,040 |
| கடன்களும் கடன்பெறுவனவுகளும் | - | 2,555,018 |
| நிதி நிலைமை | | |
| கூறப்பட்ட மூலதனம் | 212,004,020 | 212,004,020 |
| ஒதுக்கங்கள் | 3,481,925,656 | 3,275,957,634 |
| **நிதிசார் விகிதாசாரங்கள்** | | |
| மொத்த இலாப எல்லை | 82% | 66% |
| தலா ஒரு பங்கிற்கான உழைப்பு | 9.68 | 19.32 |
| உரிமை மூலதனத்தின் மீதான வருவாய் | 5.56% | 11.74% |
| பங்கு முதலீட்டு விகிதம் | 5% | 5% |
| தலா ஒரு பங்கிற்கான தேறிய சொத்துக்கள் | 174.24 | 164.52 |
| வாடகை வருமானம் | 9.65% | 10.38% |

# தலைவரின் செய்தி



ஒவ்வொரு ஆண்டும் அதற்கேயான சவால்களைக் கொண்டு வருகின்றது. எனினும், மீளாய்வாண்டு வழமையைப் பார்க்கிலும் அதிகமான சவால் மிக்கதானது என்பதனைக் குறிப்பிடுவது பாதுகாப்பானது என நான் நம்புகின்றேன். மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு இலாபம் ரூபா 32.1 மில்லியன் தொகையை எம்மால் அடையக் கூடியதாக இருந்தமையை பணிப்பாளர் சபையின் சார்பாகக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பகிரக்கூடிய இலாபத் தொகையில் 15% ஆன ரூபா 2.2 மில்லியன் தொகையை 2022 ஆம் ஆண்டின் போது பங்கிலாபமாக வழங்கியுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் போது பகிரக்கூடிய இலாபத் தொகையில் 30% இனைப் பங்கிலாபமாக எமது பங்காளர்களுக்கு முதன்முறையாக வழங்கியுள்ளோம். தொழிற்துறையில் பொருந்தும் வகையிலான அனைத்துச் சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாகவே சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை தலைவர் என்ற வகையிலும் முகாமைத்துவப் பணிப்பாளர் என்ற வகையிலும் நான் வலியுறுத்துகின்றேன்.

சவாலான பொருளாதார நிலைமைகளின் மத்தியிலும் எமது மக்கள் பாதுகாப்பான முறையிலும் பாதுகாப்பாக இருப்பதனை வலியுறுத்தும் அதேவேளை அவர்களுக்கு உரித்தான சகல சம்பளங்களையும் படிப்பணங்களையும் தொடர்ந்து வழங்கக் கூடியதாக இருந்தமை குறித்து நாம் பெருமைப்படுகின்றோம்.

தமது அறிவையும் நிபுணத்துவத்தையும் பங்களிப்பாக நல்கிய சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதற்கு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கின்றேன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மாண்புமிகு அமைச்சரிற்கும் செயலாளரிற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மாண்புமிகு இராஜாங்க அமைச்சரிற்கும் ஆண்டின் போது தொடர்ச்சியாக வழங்கிய ஆதரவிற்கும் வழிகாட்டல்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக சகல வேளைகளிலும் தமது நம்பிக்கையையும் ஆதரவையும் வழங்கிய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தினித் சிந்தக கருணாரத்ன

தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்

# பொது முகாமையாளரின் செய்தி



ஒரு மைல்கல் சாதனையை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த ஆண்டான 2022 இனைப் பார்க்கிலும் எமது கம்பனி ஏறத்தாழ 40% குறிப்பிடத்தக்க இலாப அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இவ் வெற்றிக்கு, தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளரினதும் பணிப்பாளர் சபையினதும் தலைமைத்துவமும் அனைத்து ஊழியர்களது குழு முயற்சியுமே காரணமாகும்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 40% இலாப அதிகரிப்பானது எமது கூட்டுமுயற்சியின் வலிமைக்கும் ஆற்றலுக்குமான சான்றாகும். நாம் முன்னோக்கிப் பார்க்கையில் நாம் எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் உள்ளோம். நிலைப்பாடு மற்றும் திறனுக்காக ஒரு தெளிவான மூலோபாயத்துடனான அர்ப்பணிப்புடன் நாம் நிலைநிறுத்தப்பட்டுள்ளோம்.

ஓர் சவால் மிக்க ஆண்டில் பெறுமதிமிக்க தலைமைத்துவத்தை வழங்கிய தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் சபைப் பணிப்பாளர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதற்கு இச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக்கொள்கின்றேன். அத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் “ஓஷன் டவர்” குடியிருப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கும்
அவர்களது தொடர் நம்பிக்கையும் முதலீடும் இச் சிறந்த நிதி விளைவிற்கு வழிவகுத்து எமது இலச்சிய இலக்கைத் தொடர்வதற்கு உதவியமையால் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், கம்பனியின் நிலையான வளர்ச்சிக்காக தமது ஆதரவையும் வழிகாட்டல்களையும் நல்கிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கும் தமது முழு ஒத்துழைப்பை நல்கிய ஓவீடீசி குழு அங்கத்தவர்களுக்கும் எமது மனமாரப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒன்றிணைந்து, நாம் எமது கம்பனிக்கான வெற்றியின் அடித்தளத்தை தொடர்ச்சியாக உருவாக்குவோம்.

பொறியியலாளர் டீ.எம்.என். விஜித்த திஸாவெ
பொது முகாமையாளர்

# பணிப்பாளர் சபை



Mrs Preethi Neranjala
Non-Executive Director



Mr Kalum Jayasumana
Non-Executive Director



Mr Lalith Wijayarathne
Non-Executive Director



Mr Gawesha Sanirathne
Non-Executive Director



Mr Kapila Padmakumara
Non-Executive Director



Dinith Chintaka Karunaratne
Chairman/ Managing Director



Mr Damitha Pushpakumara
Non-Executive Director



Mr Piyum Darshana
Non-Executive Director



Mrs Dammika Kumari Pathiraja
Non-Executive Director



Mr Eranga Ranathunga
Non-Executive Director

# பணிப்பாளர் சபை

**திரு தினித் சிந்தக கருனாரத்ன**
தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்
பீஎஸ்சீ உயிரியல் விஞ்ஞானம் - களனி பல்கலைக்கழகம்
வெகுசன ஊடக கற்கைகள் - சன்டா மொனிகா ஹை ஸ்கூல் - லொஸ் ஆன்ஜலிஸ், கலிபோர்னியா

**திரு லலித் விஜயரத்ன**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்
பீஎஸ்சீ (ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
எம்எஸ்சீ ( ஒக்ஸ்வர்ட் ப்ருக்ஸ் பல்கலைக்கழகம், யூகே)

**திரு கலும் ஜயசுமன**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்
தொழிற்துறைசார் வழிகாட்டல் தேசிய டிப்ளோமா
அதிவேக போக்குவரத்துக் கம்பனியின் தலைவர் (நெடுஞ்சாலை அமைச்சு)

**திருமதி பிரீதி நிரஞ்சலா**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்
சட்டத்தரணி & பிரபல நொத்தாரிசு
இலங்கை சட்டக் கல்லூரி கொழும்பு

**திரு கபில பத்மகுமார**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்
கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா
சர்வதேச கப்பல் துறைமுகப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் சான்றிதழ்

**திரு கவேஷ சனிரத்ன**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்
பட்டதாரி & டிப்ளோமா
பணிப்பாளர் – தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
பணிப்பாளர் - கூட்டுறவு வங்கி – கம்பஹ

**திரு எரங்க ரணதுங்க**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்

**திருமதி தம்மிகா குமாரி பத்திராஜா**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்
பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா
பொறியியல் தொழிநுட்ப நிறுவக சிவில் கட்டிட & அமைப்பு பொறியியல் - கட்டுநாயக்க

**திரு தமித புஷ்ப குமார**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்
வர்த்தகர்

**திரு பியூம் தர்ஷன**
நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்
மினுவங்கொட கூட்டுறவுச் சங்க உப தலைவர்
வர்த்தகர்

# செயலாற்றல் மற்றும் பெறுமதி உருவாக்கலுக்கான வணிக மாதிரி



| OUTPUTS<br>To STAKEHOLDERS | OUTCOMES<br>Capital Position as at January 1, 2023 |
|---|---|
| **SHAREHOLDERS**<br>• Profit after tax Rs. 205.2 Mn.<br>• Net assets value per share Rs. 174.24<br>• Earning per share Rs. 9.68 | **FINANCIAL**<br>• Shareholders' funds Rs. 3693.9 Mn.<br>• Total Income Rs.138.8Mn<br>• Total Assets. 3651.9Mn. |
| **GOVERNMENT INSTITUTIONS / REGULATIONS**<br>• Taxes paid Rs. 7.2 Mn.<br>• Fully compliant with the Company's Act of Srilanka | **INTELLECTUAL**<br>• Institutionalised knowledge<br>• Board approved policies covering operations<br>• Streamlined systems and procedures |
| **TENANTS**<br>• Reliable, responsive and resourceful service in an economically<br>• viable, socially responsible and environmentally friendly manner | **MANUFACTURED**<br>• Property, Plant and Equipment Rs. 15.9 Mn.<br>• Investment property Rs. 3,404 Mn.<br>• Extent of rentable space 104,512 sq.ft. |
| **EMPLOYEES**<br>• Total remuneration of Rs. 54.9 Mn.<br>• Training and Development Rs. 0.38 Mn.<br>• Enhanced employee productivity | **HUMAN**<br>• Staff cadre of 45 employees<br>• Cumulative service of 647 years<br>• Staff retention ratio 92% |
| **BUSINESS PARTNERS**<br>• OPEX paid for services Rs. 93.7 Mn.<br>• CAPEX paid for plant and equipment Rs. 0.5 Mn. | **SOCIAL AND RELATIONSHIP**<br>• Government & Regulators<br>• Long term relationship with tenants<br>• Robust and longstanding relationships with supplier |
| **CUMMUNITY**<br>• CSR activities | **NATURAL**<br>• Ongoing efforts to improve energy<br>• Efficiency through use of LED lights<br>• Collecting/disposing garbage in a responsible manner |

# பங்குதாரின் ஈடுபாடு

வெவ்வேறு பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை நாம் தெளிவாகக் கண்டறிந்து அதற்கேற்ற வகையில் எமது விளைவுகளை வகுத்துள்ளோம். இது பயனுறுதிவாய்ந்த முகாமைத்துவ நுட்ப வெளிப்படுத்தலுடன் ஏற்ற செல்வம், சேவைப் புத்தாக்கம், செயலாற்றல் இணைப்பு ஊதியம், வெளிப்படையான கொள்ளல் கொள்கைகள், செயற்திறனானதும் வினைத்திறனானதுமாக வளப் பயன்பாடு முதலியவற்றைக் கொண்டு மாறுபடும்.

மிக அக்கறை செலுத்தும் எமது பங்குதாரர்களான வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள், ஊழியர்கள், வழங்குனர் சமூகம் போன்றவர்களுக்கும் ஓர் பொறுப்புவாய்ந்த கம்பனியாக எமது முன்னேற்றம் குறித்த தகவல்களை நாடும் எவருக்கும் தெளிவான, விரிவான மற்றும் அணுகக் கூடியவகையில் தகவல்களை வழங்குவதே இவ் அறிக்கையின் இலக்காகும்.

பெறுமதி உருவாக்கம் என்பது பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட பெறுமதிக்கும் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான நிகர விளைவாகும். ஆகவே, நேர்மறையான பங்குதாரர் உறவைப் பேணுவதற்காகவே நாம் உறுதியாக உள்ளோம்.

கம்பனியால் இனங்காணப்பட்ட முக்கிய பங்குதாரர் குழுக்கள்:

- பங்குரிமையாளர்கள்
- குடியிருப்பாளர்கள்
- ஊழியர்கள்
- வழங்குனர்கள் மற்றும் வியாபாரப் பங்காளர்கள்
- அரசாங்க மற்றும் சட்டஅமைப்பு அதிகாரசபைகள்
- சமூகம் மற்றும் சுற்றாடல்

குறித்த குழுக்களுடன் திறம்பட ஈடுபடுவதற்காக, கம்பனிக்கும் அதன் பங்குதாரர்களுக்கும் இடையே தரமான தகவல்களின் பரிமாற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். எடுத்துக்காட்டாக, கம்பனியின் செயலாற்றல் குறித்த தகவல்களை நாம் மாதாந்த மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களினூடாக பகிர்ந்துகொள்கின்றோம்.

இவ் அறிக்கையில் மேலும் வெளிப்படுத்தப்பட்டவாறு, பல்வேறு வழிகளாலும் பல்வேறு வழிமுறைகள் மூலமாகவும் நாம் பங்குதாரர்களுடன் ஈடுபடுகின்றோம். ஈடுபாட்டின் நிலைப்பாடானது பங்குதாரர்கள் மற்றும் உறவுகளின் தன்மை ஆகியவற்றின் மீது அல்லது அதன் மூலம் ஏற்படக்கூடிய தாக்கத்தைப் பொறுத்ததாகும்.

இத்தகைய அர்த்தமுள்ள பிணைப்பு பங்குதாரர்கள் மற்றும் அவர்களது எதிர்பார்ப்புகளைச் சிறப்பான முறையில் புரிந்துகொள்ள உதவுவதுடன் எமது சேவையின் தரம் மற்றும் ஏதேனும் இடைவெளிகள் உட்பட தொடர்ச்சியான முன்னேற்றங்களை அடைவதற்காக எமக்கு வலுவூட்டுகின்றது. இது புதிய வணிக வாய்ப்புகளை இனங்காண்பதற்கு உதவுவதுடன் எமது ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு முயற்சிகளை மேம்படுத்தி புதிய வணிகச் சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்கும் எமக்கு உதவுகின்றது.

பங்குதாரர்களை தொடர்புபடுத்தும் சகல முனைப்பும் கம்பனியினூடாக ஒன்றித்த பொறுப்பாகக் காணப்பட்ட போதிலும், பங்குதாரர்களைத் தொடர்பு படுத்துவதற்காக முறையான பொறிமுறை ஒன்று தொடர்ச்சியாக செயற்பாட்டில் உள்ளது. இப் பொறிமுறைகளும் பங்குதாரர்களது ஆர்வம் குறித்த எமது புரிந்துணர்வும் கீழே தரப்பட்டுள்ளன.

| பங்குதாரர் | ஆக்கறை உள்ள தலைப்பு | ஈடுபாட்டு முறை | கால இடைவெளி |
|---|---|---|---|
| **பங்குரிமையாளர்** | நிதிச் செயலாற்றல்<br>பங்குரிமையாளர்களின் வருமானம்<br>ஆளுமை<br>இடர் முகாமைத்துவம்<br>விரிவுபடுத்தல்<br>வெளிப்படைத்தன்மை | சபைக் கூட்டங்கள்/ வருடாந்த பொதுக் கூட்டம்<br>வருடாந்த அறிக்கை<br>சபைக் கூட்டம்<br>நிதிக் கூற்றுக்கள்<br>சபைக் கூட்டங்கள்/ முகாமைத்துவக் கூட்டங்கள்<br>உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வு | மாதாந்தம்/ வருடாந்தம்<br>வருடாந்தம்<br>மாதாந்தம்<br>மாதாந்தம்<br>தேவைக்கேற்றப<br>தொடர்ச்சியாகவும் வருடாந்தமும் |
| **குடியிருப்பாளர்** | வாடகையும் ஏனைய கட்டணங்களும்<br>வசதிகளும் ஏனைய பயன்பாடுகளும்<br>பராமரிப்பு, பாதுகாப்பு<br>சேவைகளின் தரம்<br>ஊழியர் பயிற்சி/ அபிவிருத்தி<br>தீப் பயிற்சி/ இடர்ப்பாடுகள் தொடர்பானவை<br>கழிவு முகாமைத்துவம் | மீளாய்வுக் கூட்டங்கள்<br>கருத்துத் தெரிவிப்புக் கூட்டங்கள்<br>தொடர்பாடல்கள்<br>காலரீதியான நாளதுவரையாக்கல்<br>உள்ளகப் பயிற்சிகள்/ செயலமர்வுகள்<br>அறிவித்தல்கள் | தேவைக்கேற்றப<br>தேவைக்கேற்றப<br>தேவைக்கேற்றப<br>தேவைக்கேற்றப<br>தேவைக்கேற்றப<br>ஒரு வருடத்திற்கு ஒரு முறையேனும |
| **ஊழியர்கள்** | கவர்ச்சியான ஊதியம்<br>ஊழியர் விருத்தி<br>பணிப் பாதுகாப்பு<br>சுகாதார மற்றும் பாதுகாப்புத் தேவைப்பாடுகள்<br>நிறுவக நெறிமுறைகள் | நேரடி அறிக்கையிடல்கள்<br>பதவியணிக் கூட்டங்கள்<br>மின்னஞ்சல்/ அறிவிப்புகள் | தேவைக்கேற்றப<br>வாராந்தம்/ மாதாந்தம்<br>தேவைக்கேற்றப |
| **அரசாங்கமும் சட்டவாக்க அமைப்புகளும்** | இணக்கப்பாடு | அமைப்புகளின் மூலமான பங்களிப்பு<br>அதிகாரச்சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் | தேவைக்கேற்றப |
| **சமூகம** | கழிவகற்றல்<br>எதிர்கால வளர்ச்சிக்கான சாத்தியம்<br>சக்தித் திறன் | தொடர்புகொள்ளல்கள்<br>கலந்துரையாடல்கள் | தேவைக்கேற்றப<br>தேவைக்கேற்றப |
| **வழங்குனர்கள்** | விலைத் தளம்பல்<br>சேவைத் தரம்<br>வழங்கலிலான தாமதம் | வருகைகளும் கூட்டங்களும்<br>இணக்கப்பாடுகள்<br>நியாயமான வெளிப்படையான கேள்வு நடைமுறைகள் | தேவைக்கேற்றப |

# முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

இலங்கையின் மனை வணிகச் சந்தை பல சரிவுகளில் இருந்து மீண்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் காணிப் பெறுமதிகளின் அதிகரிப்பது, மனை வணிகச் சந்தையின் பின்னடைவிலும் உறுதியான வளர்ச்சி வாய்ப்புகளிலும் பிரதிபலிக்கின்றது. 2023 இல் பொருளாதார வளர்ச்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உலக அரசியல் சூழலின் நிலையற்ற தன்மை காணப்பட்டது. பல நாடுகள் பணவீக்கத்தைக் குறைப்பதற்கான கொள்கைகளைக் கடுமையாக்கியுள்ளதனால் இது பொருளாதார நடவடிக்கைகள் முன்னோக்கிச் செல்வதனை மந்தமாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2023 இன் பிற்பகுதியில், இலங்கைப் பொருளாதாரம், 2022 முதற்காலாண்டில் இருந்து தொடர்ச்சியான சுருக்கங்களைத் தொடர்ந்து மூன்றாம் காலாண்டில் முதல் நேர்மறைப் பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து படிப்படியாக மீட்சிக்கான அறிகுறிகளைக் காண்பிக்கத் தொடங்கியது. இது சர்ச்சையான ஓர் ஆண்டின் திருப்புமுனையாக குறிப்பிடப்பட்டதுடன் ஸ்திரத்தன்மையை நேக்கிய நீண்ட பயணத்தின் தொடக்கத்தைக் குறிப்பதாக துல்லியமாகக் காண்பித்தது.

இறுதியாக, சில கட்டுமானப் பொருட்களைப் பெறுவதில் காணப்பட்ட சிரமம், விலை ஏற்றம் போன்ற பிரச்சனைகளால் ஏற்பட்ட பின்னடைவுகள் நிலவிய போதிலும் இலங்கை மனை வணிகச் சந்தை குடியிருப்புக்களைக் கொள்வனவு செய்வோர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் நெசிழ்ச்சியாகவும் சாத்தியமானதாகவும் காணப்பட்டது.

### வருமானம்

கம்பனி 2023 நிதி ஆண்டின் போது ரூபா 138.8 மில்லியன் தொகையைப் பதிவு செய்திருந்ததுடன் இது முன்னைய நிதியாண்டுடனான ˙ ரூபா 136.5 மில்லியன் தொகையுடன் ஒப்படப்பட்டதாகும்.

### விற்பனைக் கிரயம்

கம்பனியின் விற்பனைக் கிரயம் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 47 மில்லியன் தொகையில் இருந்து ரூபா 24.8 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. இது குறிப்பாக வீடுகளின் விற்பனை செய்யப்பட்ட அதிக விற்பனைக் கியரத்துடன் ஒப்பிடுகையில் காணி விற்பனை குறைவான கிரயத்தையும் உயர்ந்த எல்லைகளையும் கொண்டமைந்தமையாலாகும்.

### இலாபத் தன்மை

கம்பனி, ரூபா 32 மில்லியன் தொகையான வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபத்தைப் பதிவு செய்திருந்ததுடன் இது இதனோடொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 45% வளர்ச்சியாகும்.

### நிதி நிலைமை

கம்பனியின் முக்கிய வணிகச் செயற்பாடு அடுக்குமாடிக் குடியிருப்புக்கள் தள அலுவலக ஸ்தலங்களை வாடகைக்கு வழங்குவது மற்றும் வீடுகள் மற்றும் காணிகளை விற்பனை செய்வதனால் நடப்பாண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த சொத்துக்களின் 88% ஆனவை முதலீட்டு ஆதனங்களைப் பிரதிபலித்தன. நடைமுறைச் சொத்துக்கள், ரூபா 57.7 மில்லியன் தொகையான நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 0.3 மில்லியன் தொகையான திறைசேரி உண்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை உள்ளடக்கிய ரூபா 58 மில்லியன் பெறுமதியான நிதிச் சொத்துக்களையும் உள்ளடக்கியிருந்தன.

### எதிர்கால வெளிப்பாடு

கம்பனியின் செயற்பாடுகளை வெற்றிகரமாகத் தொடர்வதில் நாம் நம்பிக்கையுடன் உள்ளோம். அத்துடன் மேலும் சில முதலீட்டு வாய்ப்புகளைக் குறித்து நோக்கும் அதே வேளை குடிமனைகள் மற்றும் அலுவலக ஸ்தலங்களை வாடகைக்கு வழங்கும் எமது இணை வியாபாரத்தையும் இலங்கையில் மிக முக்கியமான நிலைக்குக் கொண்டுவருவதாகும்.

# மூலதன முகாமைத்துவம்

**கம்பனியின் மூலதனத்தை திறனான முறையில் பயன்படுத்துவது கம்பனியின் முக்கிய நோக்காவதுடன் பங்குதாரர்களுக்கு நிலையான வருமானத்தை வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.**

அனைத்துப் பங்குதாரர்களுக்கும் மதிப்பை உருவாக்குவதே எமது செயற்பாட்டின் முதன்மையான நோக்காகும். மூலதனமே மதிப்பை உருவாக்குவதற்கான மூலாதாரமாவதுடன் இம் மூலதனத்தின் தரம், கிடைக்கும் தன்மை மற்றும் கொள்வனவு நிலை ஆகியவை பங்குதாரர்களுக்கான மதிப்பை உருவாக்கும் நமது இயலுமையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வினைத்திறனான கண்ணியமான முகாமைத்தும் என்பது கம்பனியின் வெற்றிக்கும் நிலைபேற்றுத்தன்மைக்கும் ஓர் முன்நிபந்தனையாகும்.

## நிதி மூலதனம்

**2023 ஆம் ஆண்டு, வெளிச் சூழல்களால் ஏற்பட்ட கடினமான சவால்களுக்கு கம்பனி பதிலடி கொடுத்து, மேம்பட்ட செயற்திறனைப் பதிவு செய்த ஆண்டாகும். கீழே விபரிக்கப்பட்ட தகவல்களின் படி, 2023 ஆம் ஆண்டில் முன்னேற்றமான நிதியை அடைவதற்காக எடுக்கப்பட்ட எமது முயற்சிகளை காண்பிக்கின்றது.**

30 ஆம் பக்கத்தில் இருந்து 56 ஆம் பக்கம் வரையான நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதிசார் வெளிப்படுத்தல்களையும் 4 ஆம் பக்கம் முதல் 5 ஆம் பக்கம் வரை பெறுமதி சேர்ப்பனவில் நிதி மூலதனத்தின் பங்கு மற்றும் எய்தப்பட்ட விளைவுகளை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட மூலதனம் குறித்த தகவல்களை வழங்குகின்றன.




**2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டிவெலப்மன்ட் (தனியார்) கம்பனி பாரிய சிக்கல்களை எதிர்கொண்ட போதிலும் முன்னேற்றமான ஆண்டை வெளிப்படுத்தியது.**

| Highlights | Challenges | Way Forward |
|---|---|---|
| **Increase in operational Profits 45%**<br><br>**EPS Rs.9.68**<br><br>**NAPS Rs.174.24**<br>**Dividend Rs.2.28Mn -2022**<br>**Rs.6.7Mn – 2023** | Maintaining Occupancy rate of apartments. Finding buyers for houses at kahathuduwa.<br>High Maintenance cost, Refurbishment and Capital replacement.<br><br>Business downturn in real estate industry with sluggish economic condition | Company has commenced to refurbish apartments to match the changing demand.<br><br>Replace major components with the advice of relevant consultants to improvethe efficiency and to minimize the risks associated. |

## வருமானம்

ஓஷன் கோபுரத்தில் உள்ள இடப்பரப்பை குத்தகைக்கு வழங்குவதன் மூலமே கம்பனியின் மூல வருமானம் பெறப்படுகின்றது. கம்பனியின் வாடகை வருமானம் ரூபா 113.4 மில்லியனைப் பதிவு செய்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16% அதிகரிப்பை வெளிக்காட்டியது.










## ஏனைய வருமானம்

ஏனைய வருமானத்தின் முக்கிய கூறு முதலீட்டு ஆதனத்தின் நியாயப் பெறுமதியிலான அதிகரிப்பாகும். இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் சிறிதளவான அதிகரிப்பைக் காண்பித்தது. ஏனைய வருமானத்தில் சட்டக் கட்டணங்கள், வழங்குனர் பதிவுக் கட்டணங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய ஏனைய கூறுகள் 2022 ஆம் ஆண்டிலான ரூபா 391.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 189.36 மில்லியனாக முதலீட்டு ஆதனத்தின் நியாயப் பெறுமதியில் மிகச் சிறிய அளவிலான அதிகரிப்பைக் கொண்டிருந்தன.

## எதிர்கால வருமான உருவாக்கம்

## கஹதுடுவ





20 காணித் துண்டுகளும் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளும் 2024 ஆம் ஆண்டின் போது அப்பாலும் விற்பனைக்காக உள்ளன. மேலதிகாக இவ்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்ட 3 வீடுகளும் விற்பனைக்காக உள்ளன.

## தெல்கந்த





உயர் குடியிருப்புகளுடனான தெல்கந்த பகுதியில் 100 பேர்ச் காணி ஒன்றுள்ளதுடன் இது விற்பனைக்காக அல்லது ஓர் முதலீட்டாளருடன் வீடமைப்பு செயற்திட்டத்திற்காக உள்ளது.

### கிரய முகாமைத்துவம்

அதிகரிக்கும் வினைத்திறன்கள் மற்றும் கடுமையான கிரயக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தியமையால் கம்பனிக்கு ஆண்டின் போதான அதன் நிர்வாகக் கிரயத்தை ரூபா 93.7 மில்லியனாகப் பேணக்கூடியதாக இருந்தது. பொருட்களின் விலைகளில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாக புராமரிப்பு மற்றும் திருத்த வேலைச் செலவினங்கள் அதிகரித்தமையால் குறிப்பாக நிர்வாகச் செலவினத்தில் 8% அதிகரிப்புக் காணப்பட்டது.

### நிதி வலிமை

ஆண்டு பூராவும் நிலவிய பேரண்டப் பொருளாதார கொந்தளிப்பிற்கும் "ஓஷன் டிவலப்மன்ட்" சிறப்பான செயலாற்றலுடனும் முன்னேற்றகரமான நிதி விளைவுகளுடனும் சிறப்பான ஆண்டை வெளிக்காட்டியது.

சிறப்பம்சங்கள்
வருமான அதிகரிப்பு 2%
மொத்த இலாப அதிகரிப்பு 27%
பகிரக்கூடிய இலாபத்தின் 30% பங்கிலாபம்

### மொத்த இலாபம்

கம்பனியின் மொத்த இலாபமான ரூபா 113.9 மில்லியன் முன்னைய ஆண்டைப்பார்க்கிலும் 27% அதிகமானமைக்கான முக்கிய காரணம் முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் காணி விற்பனைகள் தொடர்பான விற்பனைக் கிரயம் குறைந்தமையாகும்.

### செயற்பாடுகளின் அளவு

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்த சொத்துக்கள் ரூபா 3.86 பில்லியனானதுடன் கம்பனியின் மொத்த உரிமை மூலதனம் ரூபா 3 பில்லியனையும் கடந்து ரூபா 3.69 பில்லியனாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது கம்பனி நியாயப் பெறுமதி இலாபம் நீங்கலாக வரிக்கு முன்னைய தேறிய செயற்பாட்டு இலாபமாக ரூபா 32 மில்லியனைப் பதிவு செய்தது.

### பங்குரிமையாளர்களின் நிதியம்

வருமானத்தை அதிகரிப்பதற்காக தரமான சேவையை வழங்குவதன் மூலம் எமது பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்குவதில் கம்பனியின் வணிக மாதிரி கவனம் செலுத்துகின்றது. தலா ஒரு பங்கிற்கான தேறிய சொத்து முன்னேற்றத்தைப் பதிவு செய்து ஆண்டின் இறுதியில் ரூபா 174.24 ஆக முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் 6% அதிகரிப்பைக் காண்பித்தது.

**எமது வாடிக்கையாளர்களின் மதிப்பிற்கு வசதிகள், உட்கட்டமைப்பு மற்றும் தொழிநுட்பம் ஆகியவை முக்கிய காரணிகளாகவும் போட்டித்தன்மை வாய்ந்ததுமாக குடியிருப்பாளர்களைக் கவர்ந்து தக்கவைத்துக் கொள்ளும் ஆற்றலை மேம்படுத்துவதில் முக்கிய பங்கை வகிக்கின்றது.**

**"ஓஷன் கோபுரம்" கொழும்பின் மையப்பகுதியில் ஒரு முக்கிய இடத்தில் அமைந்துள்ளதுடன் குடியிருப்பாளர்களுக்காக வணிக வளாகங்களையும் கொள்வனவிற்குத் தகுந்த மனைகளையும் வழங்கி எமது மதிப்பை உருவாக்கும் செயன்முறையில் ஒருங்கிணைந்த கூறாகியுள்ளது.**

| சிறப்பம்சங்கள் | சவால்கள் | முன்னோக்கிய பாதை |
|---|---|---|
| குடிமனைகளை மெருகூட்டல் | மறுசீரமைப்பு மற்றும் மாற்றீட்டில் உயர் கிரயம் | தேவைப்பாட்டை முன்கூட்டியே இனங்கண்டு கொள்ளல்<br>இடர்கள் மற்றும் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையளித்தல். |
| கோபுரக கட்டிடத்தில் தொழிநுட்பம் மற்றும் கட்டமைப்பு மேம்பாடுகள் மீதான முதலீடு மேற்கொள்ளப்பட்டு வருதல் | தொழிநுட்ப வழக்கிழப்பு<br><br>தொழிற்துறையில் உருவாகும் போட்டித்தன்மை | தொழிநுட்ப மதிப்பீட்டை மேற்கொண்டு முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ள முன்னர் உசாவுனர்களின் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளல். |
| | வட்டி வீதத்தின் உயர்வினால் நடுத்தர வருமானத்தைக் கொண்டவர்களிடையே மனைகளைக் கொள்வனவு செய்வதற்கு அக்கறையுள்ள தரப்பினர் குறைவாக உள்ளமை | விற்பனைக்காக உள்ள ஆதனங்களைச் சந்தைப்படுத்துவதற்கு டிஜிடல் ஊடகங்கள், பல்வேறு சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்துதல். |

## மனிதவள மூலதனம்

எம்மைப் போன்ற தொழிற்துறையில் வாடிக்கையாளர்களது திருப்தி ஊழியர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. ஆகையால் குடியிருப்பாளர்கள் சௌகரியத்தையும் கவனித்தலையும் உணர்ரத் தக்க சூழலை ஏற்படுத்துவதில் அவர்கள் முக்கிய பங்கை வகிக்கின்றனர். தொழிற்துறையில் மக்களும் ஓர் போட்டி முனையில் ஓர் வளமாக உள்ளதுடன் கவர்ச்சி, ஊக்குவிப்பு மற்றும் திறனான ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் நாம் தனியான பெறுமதியை உள்ளடக்கிய பங்கை வழங்குகின்றோம.




ஊழியர்களின் பெறுமதியின் பங்கை மேம்படுத்தும் வகையிலும் மனிதவள வழிமுறையை மேம்படுத்துவதற்காக சிறந்த செயலாற்றல் காரணிக் குறிகாட்டி அமைப்பை (கேபீஐ) நடைமுறைப்படுத்தியுள்ளோம். இதில் பராமரிப்பு உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக சகல பதவியணியினரும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

புதிய கேபீஐ ஆனது மனிதவள நிர்வாகிகள், ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்களை செயலாற்றலை மேலும் செயற்திறனான முறையில் கண்காணிப்பதற்கும், அளவிடுவதற்கும் அறிக்கையிடுவதற்கும் அனுமதியளித்துள்ளது. ஆண்டின் நடுப்பகுதியிலும், ஆண்டின் இறுதியிலும் செயலாற்றல் மதிப்பாய்வின் போது அனைத்து ஊழியர்களுக்கும் தமது உடன் பொறுப்பான முகாமையாளருடன் தொழில் முன்னேற்றத் திட்டம் குறித்து கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெறுவதிற்கு கம்பனி உறுதியளிக்கின்றது.

### ஊழியர்களின் நலம்

கோவிட் - 19 நோய்த்தொற்றின் போதும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள்ளும் வீழ்ச்சியின் விளைவுகளின் மத்தியிலும ஓவீடீசி அதிகரிக்கும் பண வீக்கத்தின் விளைவுகளை ஓரளவு குறைப்பதற்கு உதவக் கூடிய வகையில், ஊழியர்களுக்கு வழமையான வருடாந்த சம்பள ஏற்றங்களை வழங்கிவருகின்றது.

இவ் ஆண்டில் சுகாதார மற்றும் பாதுகாப்புத் தொடர்பான சம்பவங்கள் எதுவும் இல்லை. கீழ்/ நடுத்தர நிலை ஊழியர்கள் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபையால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமையின் அடிப்படையில் சகல சம்பளங்களும் 2023 இல் உயர்த்தப்பட்டன. குறிப்பாக பல முன்னணிக் கம்பனிகள் தற்போது தமது ஊழியர்களுக்கான வசதிகளைக் குறைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளமையைக் கருத்திற்கொள்கையில் இந் நிலையற்ற பொருளாதார நிலைமைகளின் மத்தியில் இயங்கும் ஒரு கம்பனியாக தனது ஊழியர்களுக்கு நன்மைகளை வழங்குவதற்காக எடுத்த முடிவை தைரியமானதாக கருதவேண்டும்..

# கூட்டமைப்பு ஆளுகை

**பால் அடிப்படையிலான பகுப்பாய்வு - 2023**

| பால் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| ஆண் | 33 | 73 |
| பெண் | 12 | 27 |

**வயது பால் அடிப்படையிலான ஊழியர் புரள்வு - 2023**

| வயதுத் தொகுதி | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 18 – 20 வயது | - | - | - |
| 21 – 30 வயது | 2 | 1 | 1 |
| 31 – 40 வயது | - | - | - |
| 41 – 50 வயது | - | - | - |
| 51 – 55 வயது | - | - | - |
| 55 வயதிற்கு மேல் | 2 | 2 | - |
| மொத்தம் | 4 | 3 | 1 |

**தர அடிப்பபடையிலான ஊழியர் பகுப்பாய்வு - 2023**

| தரம் | ஆண் | பெண் |
|---|---|---|
| நிறைவேற்றுப் பதவியணி | 5 | 6 |
| நிறைவேற்றுத்தரமற்ற பதவியணி | 27 | 7 |
| மொத்தம் | 32 | 13 |

**கருத்திற்கொள்ளப்பட்ட தலைப்பின் அடிப்படையில் பயிற்சியும் அபிவிருத்தியும் - 2023**

| நிகழ்ச்சித்திட்டம் | நடாத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| கணக்காய்வு அதிகாரச்சட்டம் பற்றிய செயலமர்வு | 1 |
| ஐஎஸ்ஓ 9001 – 2015 பற்றிய செயலமர்வு | 1 |
| டிஜிடல் சந்தைப்படுத்தல் பற்றிய செயலமர்வு | 1 |

**தரத்தின் அடிப்படையிலான பயிற்சியும் அபிவிருத்தியும் - 2023**

| தரம் | ஆண் | பெண் |
|---|---|---|
| நிறைவேற்றுப் பதவியணி | 3 | 2 |
| நிறைவேற்றுத்தரமற்ற பதவியணி | 11 | 5 |
| மொத்தம் | 14 | 7 |

**நிரந்தர ஊழியர்களின் காலப்பகுப்பாய்வு - 2023**

| வயதுத் தொகுதி | மொத்தம் | % | ஆண் | % | பெண் | % |
|---|---|---|---|---|---|---|
| 18 – 20 வயது | - | - | - | - | - | - |
| 21 – 30 வயது | 2 | 4.4 | 1 | 2 | 1 | 2 |
| 31 – 40 வயது | 14 | 31.2 | 7 | 16 | 7 | 16 |
| 41 – 50 வயது | 17 | 37.8 | 15 | 33 | 2 | 4 |
| 51 – 55 வயது | 6 | 13.3 | 5 | 11 | 1 | 2 |
| 55 வயதிற்கு மேல் | 6 | 13.3 | 5 | 11 | 1 | 2 |
| மொத்தம் | 45 | 100 | 33 | 73 | 12 | 27 |

**தரத்தின் அடிப்படையிலான ஊழியர் புரள்வு - 2023**

| தரம் | ஆண் | பெண் |
|---|---|---|
| நிறைவேற்றுப் பதவியணி | - | - |
| நிறைவேற்றுத்தரமற்ற பதவியணி | 2 | - |
| மொத்தம் | 2 | - |

**பணி அடிப்படையிலான ஊழியர் பகுப்பாய்வு - 2023**

| பணி வகை | மொத்தம் | ஆண் | % | பெண் | % |
|---|---|---|---|---|---|
| நிரந்தரம் | 44 | 32 | 73 | 12 | 27 |
| ஒப்பந்தம் | - | - | - | - | - |
| மொத்தம் | 44 | 32 | 73 | 12 | 27 |

# கூட்டமைப்பு ஆளுகை

கூட்டமைப்பு நிறுவனங்கள் இயக்கப்படும், நிர்வகிக்கப்படும் மற்றும் கட்டுப்படுத்தப்படும் முறைமையையே நாம் கூட்டமைப்பு ஆளுகையாக வரையறுத்துள்ளோம். மேலும், ஓஷன் வியூ டிவெலப்மன்ட் கம்பனியில் (ஓவீடீசி) இம் முறைமையை பொறுப்புக்கூறும் வகையிலும் வெளிப்படையான முறையிலும் செயற்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் எடுக்கின்றோம். ஓவீடீசி இன் வெற்றிக்கு எமது சபை கூட்டாகப் பொறுப்பேற்று, பங்குதாரர்களை எந்நேரமும் மையப்படுத்தி இருப்பதை உறுதி செய்யும் வகையில் அதன் செயற்திறனை அதிகரிப்பதற்கு கூட்டமைப்பு நிர்வாகத்தில் சிறந்த நடைமுறையைப் பின்பற்றுகின்றது. கம்பனி அவர்களிடம் இருந்து பெறுமதியைப் பெறுகின்ற போதிலும் இவ் அமைப்பே ஓவீடீசி இன் பங்குதாரர் குழுக்களுக்கு பெறுமதியை வழங்குவதற்காகச் செயற்படுகின்றது.

இம் முறைமை வலுவாக இருப்பதனை உறுதிசெய்வதற்கு, ஓவீடீசி அனைத்து பங்குதாரர்களின் நியாயமான நலன்களையும் எதிர்பார்ப்புகளையும் வளர்ந்து வரும் அபிவிருத்திகளையும் வாய்ப்புகளையும் கருத்திற்கொண்டுள்ளது.

சபைத் தலைமைத்துவத்தின் கீழ், அனைத்து நிலைகளிலும், சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை செயற்படுத்தியுள்ளோம். இது வலுவான கூட்டமைப்புப் பெறுமதியைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட காலாச்சாரத்தைக் கொண்டுள்ளது.

ஒரு விரிவான நன்நடத்தை நெறிமுறை, திறமையான இயக்க மாதிரி அனைத்து நிலைகளிலும் செயற்திறனான முகாமைத அமைப்பை நிரூபித்துள்ளது. கம்பனி அதன் முகாமைத்துவ நடைமுறைகளின் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதி செய்கின்றது.

கம்பனியின் நிர்வாக அமைப்பு கீழே உள்ள வரைபடத்தில் எளிமையாக விளக்கப்பட்டுள்ளது.




**ஆளுகைக் கட்டமைப்பு**

**வெளிவாரியான சட்டவாக்க அளவீடுகள்**

- **2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம்**
- **1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு அதிகாரச்சட்டம்**
- **2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்டது) அதிகாரச்சட்டம்**
- **கடைகள் மற்றும் அலுவலக அதிகாரச்சட்டம், ஊசேநி மற்றும் ஊநநி அதிகாரச்சட்டங்கள், பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம்**

**உள்ளக அளவீடுகள்**

- **அக விதி**
- **உள்ளகக் கட்டுப்பாட்டு முறை**
- **நிதிக் கூற்றுக்களின் உறுதிப்பாடு – சுயாதீனக் கணக்காய்வு**

மூலோபாய அமுலாக்கம், செயலாற்றல் நடைமுறை மற்றும் செயற்பாடுகளை நடாத்தும் பொறுப்பை அவர்கள் முகாமைத்துவத்தின் மீது விதித்திருந்தனர்.

இக் கூட்டமைப்பு அறிக்கையில் கம்பனியின் ஆளுமை தொடர்பிலான கட்டமைப்பு வரையப்பட்டு பங்குதாரர்களின் பெறுமதி மீது நாம் எந்த மட்டத்தில் கவனம் செலுத்துகின்றோம் என்பது குறித்தும் குறிப்பிட்டுள்ளோம். ஒருமைப்பாடு, பொறுப்புக் கூறல், இதனை மேற்கொள்ளும் அதேவேளை கம்பனி நடவடிக்கை ஆளுகையில் வெளிப்படைத் தன்மை மற்றும் வர்த்தக நெறிமுறைகளை மிகவும் உயர்வான தரத்தில் பராமரித்துக் கொண்டு வருகின்றோம்.

கம்பனிக்கு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டம் மற்றும் அதனோடிணைந்த திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட ஏற்பாடுகளுடனான கடுமையான இணக்கப்பாட்டை வலியுத்தும் வகையில் நல்லாளுகையின் கோட்பாடுகளை பேணுவது மிக முக்கியமானதாக உள்ளது. கம்பனி தொடர்ச்சியாக சகல முறைமைகளையும் நடைமுறைகளையும் மீளாய்வு செய்து வரும் அதே வேளைன குறிப்பிடப்பட்ட நடைமுறைகளையும் தொடர்ச்சியாகப் பின்பற்றி வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்தி வருகின்றது.

**பணிப்பாளர் சபை**

எமது நிர்வாகக் கட்டமைப்பு ஒரு சுயாதீனமான, ஈடுபாட்டுடனான மற்றும் அர்ப்பணிப்பான பணிப்பாளர் சபையைக் கொண்டதாகும். நிர்வாகக் கட்டமைப்பின் நோக்கம் அனைத்துப் பங்குதாரர்களது நியாயமான உரிமைக் கோரல்களைத் திருப்திப்படுத்தி, கம்பனியின் கூட்டமைப்பு நிர்வாகப் பொறுப்புக்களை வெளிப்படையான முறையில் நிறைவேற்றுவதாகும்.

கம்பனியின் செயலாற்றலை நோக்குகையில் அனைத்துப் பங்குதாரர்களின் நலனுக்காக ஓவீடிசி தொடர்ந்து செயற்படுவதை உறுதி செய்யும் அதேவேளை பங்குதாரரின் பிரதிநிதிகளாகவும் பணிப்பாளர் குழு செயற்படுகின்றது.

**சபையின் உள்ளடக்கமும் சபையின் அமைப்பும்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் பணிப்பாளர் சபை பல்வேறு துறைகளைச் சார்ந்த பத்து சிறந்த பணிப்பாளர்களைக் கொண்டமைந்துள்ளது. அவர்களது நிபுணத்துவம். வுணிகம், கூட்டமைப்பு முகாமைத்துவம் மற்றும் கூட்டமைப்புச் சட்டம், மனை வணிகம், பல்வேறு தொழிற்துறை அனுபவத்துடன் கம்பனியின் வணிக நடவடிக்கைகளை வெற்றிகரமாக வழிநடத்துவதற்கும், வழிநடத்தவும் கட்டுப்படுத்தவும் அவர்களுக்கு உதவுகின்றது. சபை, அதன் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக, ஆரோக்கியமானதும் ஆக்கபூர்வமானதுமான கருத்துப் பரிமாற்றலை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறுபட்ட நோக்கை ஏற்றுக்கொள்ளும் சூழலை உருவாக்குவதற்குப் போதுமான அளவில் பன்முகப்பட்டதாக உள்ளது.

2023 திசெம்பர் இல் உள்ளவாறாக பணிப்பாளர்களின் பெயர்கள், ‘‘நிறைவேற்றுத் தரம்/ நிறைவேற்றுத்தரமற்ற நிலை’’ மறறும் ‘‘சுதந்திரத் தன்மை நிலை’’ பின்வருமாறாகும்.

| பணிப்பாளர்களின் பெயர் | நிறைவேற்றுத் தரம்/ நிறைவேற்றுத்தரமற்ற நிலை | சுதந்திரத் தன்மை நிலை |
|---|---|---|
| திரு தினித் சிந்தக கருனாரத்ன | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திரு கவேஷ சனிரத்ன | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திருமதி பிரீதி நிரஞ்சலா | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திரு கபில பத்மகுமார | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திரு பியூம் தர்ஷன | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திருமதி தம்மிகா குமாரி பத்திராஜா | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திரு எரங்க ரணதுங்க | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திரு. லலித் விஜயரத்ன | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திரு தமித புஷ்ப குமார | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |
| திரு கலும் ஜயசுமன | நிறைவேற்றுத்தரமற்ற | சுதந்திரமான |

# கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் பங்கேற்பு நிலை

சபைக் கூட்டங்களுக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கும் கலந்துகொண்ட பணிப்பாளர்களின் பெயர்களும் பங்கேற்பு நிலையும்

| இல. | பணிப்பாளரின் பெயர் | பிரதான சபை | | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | |
|---|---|---|---|---|---|
| | | பங்கேற்பு உரிமை | பங்கேற்ற நிலை | பங்கேற்பு உரிமை | பங்கேற்ற நிலை |
| 01 | திரு தினித் சிந்தக கருனாரத்ன | 12 | 12 | 4 | 4 |
| 02 | திரு கவேஷ சனிரத்ன | 12 | 12 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 03 | திருமதி பிரீதி நிரஞ்சலா | 12 | 12 | 4 | 4 |
| 04 | திரு கபில பத்மகுமார | 12 | 11 | 4 | 4 |
| 05 | திரு கலும் ஜயசுமன | 12 | 12 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 06 | திருமதி தம்மிகா குமாரி பத்திராஜா | 12 | 12 | 4 | 3 |
| 07 | திரு எரங்க ரணதுங்க | 12 | 12 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 08 | திரு. லலித் விஜயரத்ன | 12 | 12 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 09 | திரு தமித புஷ்ப குமார | 12 | 10 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 10 | திரு பியூம் தர்ஷன | 12 | 11 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

# பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை

## 1. பொது

வரையறுக்கப்பட்ட ஓஷன் டிவெலப்மன்ட் (தனியார்) கம்பனி "கம்பனி" யின் 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் தமது அறிக்கையையும் இந் நிதிநிலைமைக் கூற்றுக்கள் மீதான சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கையையும், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் (கம்பனிச் சட்டம்) மற்றும் அதற்கான திருத்தங்களின் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

இவ் அறிக்கை 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. ஆண்டறிக்கையின் தகுந்த எண்ணிக்கையிலான பிரதிகள் கணக்காய்வாளர்களுக்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கும் சமர்ப்பிக்கப்படும்.

கம்பனி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் 1994 யூலை 13 ஆம் திகதி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஓர் தனியார் கம்பனியாகும். இது கம்பனிப் பதிவு இல. பீவீ 17667 இன் கீழ் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாட்டிற்கமைய மீள் பதிவு செய்யப்பட்டது.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 04, புகையிரத நிலைய வீதி, இல. 25 ½ இல் அமைந்துள்ளது.

## 2. வணிகத்தின் மீளாய்வு

6 ஆம், 7 ஆம் 13 ஆம் பக்கங்களில் உள்ள "தலைவரின் செய்தி", "பொது முகாமையாளரின் செய்தி" மற்றும் "முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வுகள்" என்பன கம்பனிச் சட்டத்தின் 168 ஆம் பிரிவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளிற்கு அமைவாக கம்பனியின் நிதிச் செயலாற்றலையும் நிதி நிலைமையையும் தேவைக்கேற்றவகையிலான ஒட்டுமொத்த மதிப்பீட்டையும் வழங்குகின்றன.

### முக்கிய வணிக நடவடிக்கைகள்

கம்பனியின் முக்கிய வணிக நடவடிக்கைத் தன்மை 41 ஆம் பக்கத்தில் உள்ள நிதிக் கூற்றுக் குறிப்பு 1.2 இல் வழங்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போது கம்பனியின் முதன்மையான நடவடிக்கைகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை.

### நிதிக் கூற்றுக்கள்

கம்பனிச் சட்டத்தின் 151 ஆம் 168 (1) (ஆ) ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளிற்கு இணங்க தயாரிக்கப்பட்ட கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 37 முதல் 67 ஆம் பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

### நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

கம்பனியின் விவகாரங்கள் உண்மையான மற்றும் நியாயமான பார்வையைப் பிரதிபலிக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்களே பொறுப்பானவர்கள். 30 ஆம் பக்கத்தில் இருந்து 56 ஆம் பக்கங்கள் வரையில் காணப்படும் வருமானக் கூற்று, இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அவற்றின் குறிப்புகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளிற்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

### சுயாதீனமான கணக்காய்வாளர் அறிக்கை

2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான சுயாதீனமான கணக்காய்வாளர்களது அறிக்கை 30 ஆம் பக்கத்தில் இருந்து 36 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளன.

### முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் ஆண்டின் போதான மாற்றங்களும்

கம்பனியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பின்பற்றப்பட்ட முக்கிய கணக்கீட்டுக்கொள்கைகள் 42 ஆம் பக்கத்தில் இருந்து 48 ஆம் பக்கம் வரை குறிப்பிடப்பட்டுள்ளன. கம்பனியால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் ஆண்டின் போது எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

### பணிப்பாளர்களின் ஊதியம்

2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற நிதியாண்டிற்காக கம்பனி தொடர்பிலான பணிப்பாளர்களது ஊதியம், 49 ஆம் பக்கத்தில் உள்ள நிதிக் கூற்றின் குறிப்பு 08 இல் கம்பனிச் சட்டத்தின் 168 (1) (ஊ) பிரிவின் தேவைப்பாட்டிற்கமைவாக தரப்பட்டுள்ளது.

### மொத்த வருமானம்

2023 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் மொத்த வருமானம் ரூபா 138.8 மில்லியனாகும். (2022 இல் ரூபா 136.5 மில்லியனாகும்)

## 4. பங்கிலாபங்களும் ஒதுக்கங்களும்

### பகிரக்கூடிய இலாபம்

2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக கம்பனியின் பகிரக்கூடிய இலாபத்தின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

| திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | 2023 ரூபா'000 | 2022 ரூபா '000 |
|---|---|---|
| ஆண்டிற்கான செயற்பாடுகளிலிருந்தான இலாபம் | **215,003** | 402,508 |
| **வரிக்கு முன்னைய இலாபம்** | **225,920** | 413,544 |
| கழி: வருமான வரிப் பொறுப்பு | **(9,180)** | (6,761) |
| வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் | **216,740** | 406,783 |
| கழி: ஆண்டின் போதான மூலதனச் சொத்துக்களின் கொள்வனவுக் கிரயம் | **(509)** | (100) |
| கழி: முதலீட்டு ஆதனத்தின் நியாயப் பெறுமதியிலான வருமானம் மற்றும் காலக்கழிவின் மீள்பதிவு | **(193,814)** | (391,420) |
| பகிரக்கூடிய இலாபம் | **22,417** | 15,263 |

### வரிக்கான ஏற்பாடு

2023 ஆண்டிற்கான வருமான வரிச செலவினம் 30மூ ஆகக் கணிப்பிடப்பட்டுள்ளது. 50 ஆம் பக்கத்தில் நிதிக்கூற்றின் குறிப்பு 10 இல் தரப்பட்டுள்ளது.

"வருமான வரி" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் - எல்கேஏஎஸ் 12 இல் விதந்துரைக்கப்பட்டதன் படி, பொறுப்பு முறையின் கீழ் சகல அறிந்த தற்காலிகமான மாற்றங்கள் மீதும் கம்பனி பிற்போடப்பட்ட வரிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

சாதாரண பங்குகளின் மீதான பங்கிலாபம்

கம்பனி 2024 ஆம் ஆண்டில் செலுத்தக்கூடிய வகையில் 2023 ஆம் அண்டிற்கான பகிரக்கூடிய இலாபத்தில் 30% ஆன பங்கிலாபத்தை 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி மும்மொழிந்திருந்தது

### ஒதுக்கங்கள்

கம்பனியின் ஒதுக்கங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | 2023 ரூபா'000 | 2022 ரூபா '000 |
|---|---|---|
| நியாயப் பெறுமதியிலான ஒதுக்கம் - முதலீட்டு ஆதனம் | **189,365** | 391,419 |
| பிடித்துவைத்த வருமானம் | **15,141** | 15,890 |
| **மொத்தம்** | **204,506** | 407,309 |

## 5. ஆதன, இயந்திர உபகரணங்கள்

ஆதன, இயந்திர உபகரணங்கள் மீதான மூலதனச் செலவின விபரங்கள் 52 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 12 இல் தரப்பட்டுள்ளன.

### முதலீட்டு ஆதனம்

வாடகை வருமானம் ஈட்டப்படுவதற்காகவும் மூலதன மதிப்பேற்றத்திற்காகவும் வைத்திருக்கும் காணி மற்றும் கட்டிடங்கள் முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதலீட்டு ஆதனம், தொழிற்துறை மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு "நியாயப் பெறுமதி" யில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நியாயப் பெறுமதிக்கும் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆதனத்தின் நடைமுறைச் சந்தைப் பெறுமதியை மீள்பெறுமதியிடப்பட்ட தொகைகள் விஞ்சவில்லை என்பது பணிப்பாளர்களது அபிப்பிராயமாகும்.

முதலீட்டு ஆதன விபரம் 53 ஆம் பக்கத்தில் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 14 இல் தரப்பட்டுள்ளன.

## 6. பங்குகள் பற்றிய தகவல்கள்

### கூறப்பட்ட மூலதனம்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூறப்பட்ட மூலதனம் ரூபா 212 மில்லியனாகும். இது 212,000 சாதாரண பங்குகளைக் கொண்டிருந்ததுடன் இது மீளாய்வாண்டின் போது மாற்றமடையாது காணப்பட்டது.

### பங்குரிமைகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 12,000,000 பங்குகளை (56.6%) கொண்டிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை 9,200,000 (43.4%) பங்குகளைக் கொண்டிருந்தது.

## 7. பணிப்பாளர்கள்

### பணிப்பாளர்களின் பட்டியல்

2023 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கம்பனியின் பணிப்பாளர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன:

திரு தினித் சிந்தக கருனாரத்ன (தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்)

திரு கலும் ஜயசுமன (பணிப்பாளர்)

திரு கவேஷ சனிரத்ன (பணிப்பாளர்)

திரு தமித புஷ்ப குமார (பணிப்பாளர்)

திரு. லலித் விஜயரத்ன (பணிப்பாளர்)

திருமதி பிரீதி நிரஞ்சலா (பணிப்பாளர்)

திரு கபில பத்மகுமார (பணிப்பாளர்)

திரு பியூம் தர்ஷன (பணிப்பாளர்)

திருமதி தம்மிகா குமாரி பத்திராஜா (பணிப்பாளர்)

திரு எரங்க ரணதுங்க (பணிப்பாளர்)

**ஒப்பந்தங்கள் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்கள் மீது பணிப்பாளர்களின் அக்கறை**

கம்பனியுடனான ஒப்பந்தங்கள் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் எவ்வித ஆர்வத்தையும் பணிப்பாளர்கள் கொண்டிருக்கவில்லை. நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இல. 27.3 இல் “தொடர்புபட்ட தரப்பினர்களின் வெளிப்படுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

## 8. சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கம்

சட்டங்களையும் பிரமாணங்களையும் மீறும் வகையிலான எந்தவித நடவடிக்கைகளிலும் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை.

## 9. சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலுக்குத் தீங்குவிளைவிக்கும் எந்தவித செயற்பாட்டிலும் கம்பனி அதன் அறிவிற்குத் தெரிந்த வகையில் ஈடுபட்டிருக்கவில்லை.

## 10. நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள், தமது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவகையில் அரசாங்கத்திற்கு உரித்தான சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகளையும், ஏனைய ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களுக்குத் தொடர்புபட்ட உாியி நேரத்தில் செலுத்தியுள்ளது என திருப்திகொள்கின்றனர்.

# சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

**குழுவில் உள்ளடங்குவோர்:**

| இல. | பெயர் | பதவி | குழுவின் பதவி |
|---|---|---|---|
| 01 | திரு தினித் சிந்தக கருனாரத்ன | தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளர் | குழுத் தலைவர் |
| 02 | திருமதி பதிராஜா முதியான்செலாகே | கம்பனிப் பணிப்பாளர் | அங்கத்தவர் |
| 03 | திருமதி பிரீதி நிரஞ்சலா ஏகநாயக்க | கம்பனிப் பணிப்பாளரும் சட்டத்தரணியும் | அங்கத்தவர் |
| 04 | திரு கனேவலகே கபில பத்மகுமார | கம்பனிப் பணிப்பாளர் | அங்கத்தவர் |
| 05 | திருமதி. எஸ்டீஆர்எச். சேநானாயக்க | கம்பனியின் உள்ளகக் கணக்காய்வாளர் | அவைக் கூட்டுநர் |

**குழுவிற்கான அவதானிப்பாளர்களாக பின்வரும் அங்கத்தவர்கள் பிரதிநித்துவப்படுத்தப்பட்டுள்ளனர்**

- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர்
- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர் ஒருவர்.

**கூட்ட அமர்வு விபரம்**

| பணிப்பாளர் | அமர்வு |
|---|---|
| திரு தினித் சிந்தக கருனாரத்ன | 4/4 |
| திருமதி பதிராஜா முதியான்செலாகே | 4/4 |
| திருமதி பிரீதி நிரஞ்சலா ஏகநாயக்க | 4/4 |
| திரு கனேவலகே கபில பத்மகுமார | 4/4 |

## குறிப்பு விதிமுறைகள்

பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல.55 இற்கமைவாக, கணக்காய்வு முகாமைத்துவக் குழு ஆகக் குறைந்தது மூன்று நிறைவேற்றுத்தரமற்ற சபை அங்கத்தவர்களையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

## கணக்காய்வுக் குழுவின் முதன்மைப் பொறுப்புகள்

காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைகளை மீளாய்வு செய்து, முகாமைத்துவத்திற்கும் வெளிக் கணக்காய்வாளர் களுக்கும் வழங்கப்படும் நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நம்பகமான முறையில் உள்ளதை உறுதி செய்து பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிலையிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்எப்ஆர்எஸ்/ எல்கேஏஸ்) மற்றும் 2007 இன் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குவதனை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.

உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவத்தின் போதுமான தன்மை குறித்த மீளாய்வும் உறுதிப்படுத்தலும்.

பணிப்பாளர் சபையால் நிர்ணயிக்கப்பட்ட சகல கொள்கைகள் மற்றும் நடைமுறைகளையும் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்தல்.

உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வுச் செயற்பாடுகள் இருப்பின் அவற்றின் சுயாதீனத் தன்மை மற்றும் செயலாற்றல் குறித்து கண்காணித்து அவர்களது காண்புகள் மற்றும் பரிந்துரைகள் குறித்து நிர்வாகத்துடன் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல்.

## நிதி அறிக்கையிடல்

சபை, நிதி அறிக்கையிடலிற்கான பொறுப்பைக் கணக்காய்வுக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. குழு, கம்பனியின் இடைக்கால நிதிக்கூற்றுக்களை சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்க முன்னர் மீளாய்வு செய்து அங்கீகரித்து உரிய அமைச்சிற்குச் சமர்ப்பிக்கின்றது. மேலும், கணக்காய்வுக் குழு வருடாந்த நிதிக் கூற்றுக்களையும் ஆய்வு செய்து அங்கீகரிக்கின்றது.

குழு, வருடாந்த நிதி அறிக்கைகளைத் தயாரிக்கையில் கம்பனியால் பின்பற்றப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமைகளை மீளாய்வு செய்து கலந்துரையாடுகின்றது. குறிப்பாக, சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் நம்பகரமான முறையிலும், பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகளிற்கு இணங்கும் வகையிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்எப்ஆர்எஸ்/ எல்கேஏஸ்) மற்றும் 2007 இன் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குவதனை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.

## உள்ளகக் கணக்காய்வாளரின் பங்கு

ஓர் நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம், ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறைகள் திறன்பட செயற்படுகின்றது என்பதற்கான சுயாதீனமான உத்தரவாதத்தை வழங்குவதே உள்ளகக் கணக்காய்வாளரின் பங்காகும்.

## இது நிறுவனத்திற்கு எவ்வாறு பெறுமதி சேர்க்கின்றது.

எந்த ஒரு நிறுவனத்தினதும் நிலைத்திருக்கும் நிலைக்கும் செழிப்பிற்கும் மூலாதாரமான பிரச்சனைகளை உள்ளகக் கணக்காய்வாளர்கள் கையாள்கின்றனர். வெளியகக் கணக்காய்வாளர்களைப் போலல்லாது, அவர்கள் நிறுவனத்தின்

நற்பெயர், வளர்ச்சி, சுற்றுச் சூழலின் மீதான தாக்கம் மற்றும் அதன் ஊழியர்களை அது நடாத்தும் விதம் குறித்து பரந்த சிக்கல்களைக் கருத்திற்கொள்வதற்காக நிதி இடர் மற்றும் கூற்றுக்களுக்கு அப்பால் நோக்குகின்றனர்.

மொத்தத்தில் உள்ளகக் கணக்காய்வாளர்கள் நிறுவனங்களின் வெற்றிக்காக உதவுகின்றனர், உத்தரவாதம் மற்றும் உசாவுகை என்பவற்றின் இணைப்புடன் நாம் இதனைச் செயற்படுத்துகின்றோம். எமது பணியின் உறுதிப் படுத்தற் பணியானது, கட்டமைப்பில் உள்ள நிறுவனத்தை எவ்வாறு முறைமைகளை வடிவமைத்து, கட்டமைப்பின் இயக்கம் சிறப்பாக வடிவமைப்பது என்பது குறித்து முகாமையாளர்கள் மற்றும் ஆளுனர்களுடன் தொடர்புகொண்டு நிறுவனத்தின் செயற்பாட்டைத் தொடர்ந்து கண்காணிப்பதாகும். அதனை அடுத்து, அவசியத்திற்கேற்ப அவ் அமைப்புகளையும் செயன்முறைகளையும் மேம்படுத்துவதற்கான ஆலோசகைகளை நாம் வழங்குகின்றோம்.

## கணக்காய்வுக் குழுவின் பங்கு

காலாண்டு நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்து, அங்கீகரித்து பொறுப்பான அமைச்சிற்கு அதனை அனுப்பவைக்க முன்னர் சபைக்குப் பரிந்துரை செய்வது கணக்காய்வுக் குழுவின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாகும். மேலும், ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களையும் மீளாய்வு செய்கின்றது.

## உள்ளகக் கணக்காய்வாளரின் பங்கு

ஓர் நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம், ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறைகள் திறன்பட செயற்படுகின்றது என்பதற்கான சுயாதீனமான உத்தரவாதத்தை வழங்குவதே உள்ளகக் கணக்காய்வாளரின் பங்காகும்.

## உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் தொடர்ந்தியங்கும் நிலை

கம்பனியால் பின்பற்றப்படும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளின் செயற்திறனை மீளாய்வு செய்வதற்கு கணக்காய்வுக் குழு பொறுப்பானதாகும். எதிர்வு கூறக்கூடிய காலத்திற்கான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை பற்றிய திறன் குறித்தும் குழு மதிப்பிடுகின்றது.

## ஒழுங்குமுறை இணக்கம்

நியதிச்சட்ட விதிமுறைகளின் இணக்கத்தை உறுதி செய்யும் வகையிலான செயற்பாடுகள் நடைமுறையில் உள்ளன. அனைத்து சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கும் கம்பனி இணங்கியுள்ளதனை உறுதி செய்வதற்காக காலாண்டு இணக்கத்தை குழு மதிப்பாய்வு செய்தது. மேலும், ஒழுங்குமுறை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடிதங்களைக் குழு கண்காணித்து மதிப்பீடு செய்கின்றது.

## வெளியகக் கணக்காய்வு

கம்பனி, ஒரு அரசாங்கக் கணக்காய்வாளரை வெளியகக் கணக்காய்வாளராக நியமித்து, அவ் வெளியகக் கணக்காய்வாளரின் சுதந்திரத்தன்மை, செயற்திறன் மற்றும் நோக்கம் ஆகியவற்றை குழு மதிப்பாய்வு செய்கின்றது.

## குழு மதிப்பீடு

கணக்காய்வுக் குழுவின் செயற்திறன் பற்றிய சுதந்திரமான மதிப்பீடு ஆண்டின் போதான சபையின் ஏனைய உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டது.

## முடிவு :

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள், செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவச் செயன்முறைகள் ஆகியவை நிறுவனத்தின் விவகாரங்கள் நிதி அறிக்கை, சட்டபூர்வ மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாடு மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதில் திருப்திகரமாக நிர்வகிக்கப்படுகின்றன என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதில் கணக்காய்வுக் குழு திருப்தி அடைந்துள்ளது.

# இடர் முகாமைத்துவ அறிக்கை

### இடர் முகாமைத்துவம்

இடர் முகாமைத்துவம் என்பது ஓர் நிறுவனத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைக் குறைப்பதற்காகச் சாத்தியமான இடர்களைக் கண்டறிந்து, மதிப்பிட்டு நிர்வகித்தலைக் குறிக்கின்றது.

அதன் முக்கியத்துவம் நிகழ்வின் நிகழ்தகவின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது. ஓஷன் வியூ டிவெலப்மன்ட் இல் பாதிப்பைக் குறைக்கும் நோக்கில், துரதிஷ்ட வசமான நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்காக அல்லது நிகழும் நிகழ்தகவைக் கட்டுப்படுத்தவும் கண்காணிப்பதற்கும் வளங்களைப் பயன்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த முயற்சியை நாம் பின்பற்றி இதனால் சேதங்களைக் குறைக்கின்றோம்.

### குறிக்கோள்கள்

நிறுவனத்தின் இடர் நிர்வாகக் கட்டமைப்பின் முதன்மை நோக்கங்கள் மற்றும் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள்ாவன:

- இடர் குறித்த முகாமைத்துவ மற்றும் மேற்பார்வைக்குத் தேவையான நிறுவனக் கட்டமைப்பை நிறுவுதல்.
- மூலோபாயங்களை உருவாக்கி இடர்களை நிர்வகிப்பதற்காக அவற்றைச் செயற்படுத்துவதல்.
- கம்பனிக்குள் வலுவான இடர் கலாச்சாரத்தை நிறுவனமயமாக்குதல்.
- இடர்களை ஏற்றுக்கொள்ளல், மாற்றுதல், குறைத்தல் மற்றும் குறைப்பதற்கான வழிகளைப் பரிந்துரைப்பது தொடர்பான முடிவுகளுக்கான செயற்பாட்டுப் பொறுப்பை நிறுவுதல்.
- தொடர்ச்சியான அடிப்படையில் இடர் வெளிப்பாடுகளை கால அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.
- அதன் ஆபத்து வெளிப்பாடுகளால் ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புகளை மதிப்பிடுதல்.

### இடர் சூழல்

மீளாய்வாண்டில், பொருளாதார, சமூக மற்றும் சந்தை மாற்றங்கள் காரணமாக சவாலான சூழலில் கம்பனி இயங்கியது. எதிர்பாராத நிகழ்வுகளை கம்பனி எதிர்கொள்ள வேண்டியிருந்தது. உதாரணமாக அதிக வட்டி வீதங்கள், இதன் விளைவாக வீடுகளை விற்பனை செய்வது மிகவும் கடினமாகக் காணப்பட்டதுடன் பொருளாதார வீழ்ச்சி கோபுரக் கட்டிடக் குடியிருப்பு வீதங்களைப் பாதித்துள்ளது.

### 2004 இற்கான திட்டம்

2004 ஆம் ஆண்டிற்கான இடர் நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான முக்கிய முயற்சிகள பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

- ஈஆாபீ முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியத்தை மதிப்பிடுதல்
- போடியம் பகுதியின் நீர்ப்புக் காப்புத் திட்டம்

# இடர் கணிப்பீடு மற்றும் குறைப்பதற்கான மூலோபாயங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாத்தியக் காரணி | சீ – நிச்சயம் | எல் - சாத்தியம் | பீ – நிகழ்நிலை | யூ - சாத்தியமற்ற | ஆர் - அருமை |
| தாக்கக் காரணி | வீ – மிக உயர்வு | எச் - உயர் | எம் - மத்திய | எல் - குறைவான | |

| இடர் | இடர் கணிப்பீடு சாத்திய நிலை | தாக்கம் | குறைப்பதற்கான மூலோபாயம் |
|---|---|---|---|
| மூலோபாய இடர் | | | • பணிப்பாளர் சபையால் வணிகத்திட்டத்தின் படி அங்கீகரிக்கப்படுதல் |
| மூலோபாய இலக்குகளை அடையத் தவறியமை | யூ | எம் | • குறித்த நிதியாண்டு ஆரம்பிக்கப்பட முன்னர் பணிப்பாளர் சபையால் வருடாந்த பாதீடு அங்கீகரிக்கப்படுதல்<br>• முரண்கள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுதல் |
| இயற்கை அழிவுகளும் தீ | | | |
| கம்பனியின் ஆதனங்களுக்கு இயற்கை அழிவுகளாலும் தீயழிவாலும் சேதங்கள் ஏற்படக் கூடும் என்பதனால் ஒட்டுமொத்தமாக கம்பனிக்குப் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் | பீ | எம் அழிவுகள் | • அத்தகைய இடர்களைக் குறைப்பதற்காக காப்புறுதிக் கொள்கைகளைப் பெற்றுக்கொள்ளல்<br>• தீக் காப்பு நிரப்பிகளை கிரமமாக மீள்நிரப்பிக்கொள்ளல் |
| கடன் இடர் | | | |
| குறித்த நேரத்தில் குடியிருப்பாளர்களிடம் இருந்து வாடகையை அறவிட இயலாது போயின் இடர் கடன் ஏற்படும். | எல் | எம் | • செலுத்தத் தவறும் இடரைக் குறைப்பதற்காக கடன்பட்டோரைக் கிரயமாகக் கண்காணிப்பதற்காக ஓர் அர்ப்பணிப்பான உத்தியோகத்தர் உள்ளமை |
| மனிதவள மூலதன இடர் | | | |
| தகைமையுள்ள, அனுபவம் வாய்ந்த முக்கிய பதவியணியில் உள்ளவர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு கம்பனியால் இயலாத நிலை ஏற்படும். | யூ | எல் | • சிறந்த வேலைச் சூழலை உருவாக்குதல்<br>• பதவியணியினருடன் தொடர்புபட்ட தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி |

# இடர் முகாமைத்துவ அறிக்கை

| இடர் | இடர் கணிப்பீடு<br>சாத்திய நிலை | <br>தாக்கம் | குறைப்பதற்கான மூலோபாயம் |
|---|---|---|---|
| மோசடி ஏற்படக்கூடிய இடர் | | | |
| உள்ளகக் கட்டுப்பாடுகள், நடைமுறைகள் மற்றும் முறைமைகள் போதாததன் காரணமாக கம்பனியின் சொத்துக்களின் முறையற்ற பாவனையை ஏற்படுத்தக்கூடும் | ஆர் | எல் | • மோசடி இடரை நீக்குவதற்காக வேறுபட்ட மட்டங்களில் அங்கீகரிப்பையும் திணைக்களக் கலப்புப் பரிந்துரைப்பை அமுற்படுத்துதல் |
| வட்டி வீதங்கள் | | | |
| கடன் கிரய அதிகரிப்பு இடர் | ஆர் | எல் | • நாளாந்த அடிப்படையில் காசுப்பாய்ச்சல் கட்டுப்பாடும் முகாமைத்துவமும்<br>• கடன் தொடர்பாக விதிமுறைகள் மற்றும் வட்டி வீதங்களின் சாதகமான கலந்துரையாடல் |
| சுகாதாரமும் பாதுகாப்பும் | | | |
| நபர்கள், பதவியணி, குடியிருப்பாளர்களுக்கான அச்சுறுத்தல் இடர் | யூ | எம் | • கம்பனி சகல தொழிற்துறைப் பாதுகாப்புத் தேவைப்பாடுகளுடனும் இணங்கி நடக்கின்றது. கம்பனி முறையான பயிற்சி நெறிகளைச் செயற்படுத்துவதுடன் வேலைத்தளப் பாதுகாப்பு நடைமுறைகளையும் செயற்படுத்துகின்றது. தொழிற்துறை தொடர்பாக தேவையான சகல காப்புறுதிக் காப்புகளையும் கம்பனி பெற்றுள்ளது. |
| வணிகப் பெயர் மற்றும் நற்பெயர் இடர் | | | |
| | | | • ஊழியர்கள், குடியிருப்பாளர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளல். எந்தவித வேலைத்தள விபத்துக்களும் பதிவாகியிருக்கவில்லை. பாதுகாப்புப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் உ+ ம் : நீரின் தர ஆய்வு |
| உரிய நேரத்தில் வழங்கல் மற்றும் சேவைகள்<br>தரங்கள் | எல் | எம் | • உயர் தரத்திலான சேவைத் தரப் பராமரிப்பு<br>• வாடிக்கையாளர்களின் கருத்துத் தெரிவுப்புகள் மற்றும் பதிலளிப்புகள் தொடர்பான கிரமமான மீளாய்வுகள் |
| முக்கிய வழங்குனர்கள்ன | | | |
| | யூ | எம் | • சுமூகமான இயக்கத்திற்கு மின்தூக்கி, மின்பிறப்பாக்கிகள் மற்றும் ஏனைய சேவைகளி தொடர்பில் முழுமையான பராமரிப்பு உடன்படிக்கைகளில் ஈடுபடுதல் |

# சுயாதீனக் கணக்காய்வாளரின் அறிக்கை

எச்யூடீ/ ஏ/ஓவீடீசீ/01/2023/09 2024 மே 31

தலைவர்
வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டிவெலப்மன்ட் தனியார் கம்பனி

**வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டிவெலப்மன்ட் தனியார் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டிவெலப்மென்ட் கம்பனியின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடனான 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கம்பனியின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) மீளாய்வாண்டின் போது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பான ரூபா 1,256,262 தொகையான போதிலும் நிதி நிலைமைக் கூற்றின் படி, ரூபா 4,187,538 ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்பு மற்றும் ஆண்டிற்கான பிற்போடப்பட்ட வரிச் செலவினம் ரூபா 2,931,276 தொகையால் அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 38 – 37 ஆம் பிரிவுகளின் படி, ரூபா 130 மில்லியன் பெறுமதியான நட்டஈட்டைக் கோரி ஓர் கம்பனியால் தொடரப்பட்டிருந்த வழக்குத் தொடர்பாக நிகழத்தக்க பொறுப்பிற்காக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப்பாய்ச்சற் கூற்றுக்களில் தொழிற்படு மூலதனச் சீராக்கங்களிற்கு முன்னர் செயற்பாட்டு நடைமுறைகளின் காசுப் பாய்ச்சல் ரூபா 26,480,572 ஆன போதிலும் கம்பனி அதனை ரூபா 21,147,340ஆகக் காண்பித்திருந்தது. இதன் காரணத்தால் தொழிற்படு மூலதனச் சீராக்கங்களுக்கு முன்னரான செயற்பாடு நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் ரூபா 5,333,232 ஆல் குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 கம்பனியின் 2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

ஏனைய தகவல்கள் கம்பனியின் 2023 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. ஆனால் இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை *பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில்* மற்றும்

அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

கம்பனியின் 2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்க்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் கம்பனியின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.5 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும்,

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) பிரிவில் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை கம்பனி பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கை முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான காரணமாக இருந்த பகுதியில் 1.2 (அ) இல் உள்ள அவதானிப்புத் தவிர்ந்த முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்படுத்தல்களில் கீழே குறிப்பிடத்தக்க அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் நிர்வாக சபை அங்கத்தவர்கள் எவருக்கும் கம்பனி சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் உள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாத வபையில் செயற்பட்டுள்ளதாக.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ) கம்பனியால் 2019 ஆம் ஆண்டின் போது பார்க் வீதி கட்டிடத்தில் 21 கடைகள் ரூபா 70,025,000 இற்கு லான்ட் கிலோபல் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் கொள்வனவாளரிடம் இருந்து ரூபா 20,025,000 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அக் கடைகளிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு தேவையான மின்சாரம் மற்றும் நீர் வழங்கப்பட்டிராமையால் கடைகள் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்பட்டதுடன் கொள்வனவாளரால் ரூபா 130 மில்லியன் தொகையான நட்டஈடு கோரப்பட்டு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கம்பனிக்கு எதிராக ஓர் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இவ்வாறே, 2005 ஆம் ஆண்டின் போது நிர்மாணிப்புகள் பூர்த்தியடைந்திருந்த இவ் 21 கடைகளும் கணக்காய்வுத் தினமாகிய 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான 19 வருடங்களாக மூடப்பட்ட நிலையில் இருந்தமை விளைவற்ற முகாமைத்துவத் தீர்மானங்களின் விளைவென்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஓஷன் வியூ போடியம் கட்டிடத்தின் முதலாம் கட்டத்திற்காக முதலீட்டாளர்களிடம் இருந்து பெறப்பட்டு மீளச் செலுத்தப்பட வேண்டிய பணத்தின் ரூபா 9,125,000 கூட்டுத்தொகை 04 முதல் 08 வருட காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்படாதிருந்தது. இந் நிர்மாணிப்புகளிற்காக ஏற்ற முதலீட்டாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிராததன் காரணமாக இந் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,628,407 ஆன பிடித்துவைத்த மீதித் தொகை 03 முதல் 09 ஆண்டு வரையான காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மத்தேகொட வீடமைப்புச் செயற்திட்ட நிர்மாணிப்பிற்காக தனியார் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,191,375 தொகையான பிடித்து வைத்தல் தொகையும் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின இறுதி வரையிலும் 01 – 05 வரையான காலம் கடந்திருந்த போதிலும் அறவிடப்படாத கடன்படுனர் மீதி ரூபா 4,975,913 ஆகக் காணப்பட்டதுடன், 05 – 11 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் அறவிடப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 9,071,144 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், இக் குடியிருப்பாளர்கள் கணக்காய்வுத் தினம் வரையிலும் வாடகை வீடுகளில் இருந்து விலகிச் சென்றிருந்ததுடன் வாடகைக் குடியிருப்பாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய

ரூபா 1,385,526 தொகையான கோவைகளும் காணாமற்போயிருந்தன.

(உ) 09 வீட்டு அலகுகளின் உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டு 10 மாதங்கள் முதல் 06 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கைகளில் ஈடுபடாது வாடகை வீட்டு உரிமையாளர்கள் குடியிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த பிடித்துவைத்தல் வரித் தொகையான ரூபா 1,697,777 தொகை 10 வருட காலத்திற்கு மேல் பழைமை வாய்ந்த மீதியாகக் காணப்பட்டதுடன் அம் மீதியை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதி அறிக்கைகள்

| வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டிவெலப்மன்ட் தனியார் கம்பனி | | | |
|---|---|---|---|
| **இலாப நட்ட மற்றும் ஏனைய விகரமான வருமானக் கூற்று** | | | |
| | | 2023 | 2022 |
| | குறிப்பு | | (திருத்தப்பட்டது) |
| | | ரூபா | ரூபா |
| வருமானம் | 6 | 138,840,123 | 136,569,138 |
| விற்பனைக் கிரயம் | 8 | (24,876,470) | (47,083,338) |
| **மொத்த இலாபம்** | | **113,963,653** | **89,485,800** |
| ஏனைய வருமானம் | 7 | 194,823,211 | 399,878,809 |
| நிர்வாகச் செலவுகள் | 8 | (93,783,430) | (86,856,771) |
| **செயற்பாட்டு இலாபம்** | | **215,003,433** | **402,507,837** |
| நிதி வருமானம் | | 11,045,324 | 11,584,945 |
| நிதிக் கிரயம் | | (128,938) | (548,712) |
| தேறிய நிதி (கிரயம்) வருமானம் | 9 | 10,916,386 | 11,036,234 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **225,919,819** | **413,544,071** |
| வருமான வரி பொறுப்பு/ (செலவினம்) | 10 | (20,720,792) | (3,979,147) |
| தொடர் செயற்பாட்டிலிருந்தான இலாபம் | | **205,199,028** | **409,564,924** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| **இலாப நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படக் கூடிய விடயங்கள்** | | | |
| உரிமையாளர் குடியிருக்கும் ஆதனத்தின் மீதான மீள்மதிப்பீட்டு இலாபம் | 14 | 3,751,140 | 11,400,000 |
| **இலாப நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்பட முடியாத விடயங்கள்** | | | |
| வரையறுக்கப்பட்ட நலன் பொறுப்பு மீதான மீள்கணிப்பீட்டு (நட்டம்)/ இலாபம்) | 23 | (989,405) | (988,604) |
| ஓய்வூதிய நலன் கடப்பாட்டின் மீள்கணிப்பீடு தொடர்பான பிற்போடப்பட்ட வரி | | 296,822 | 296,581 |
| ஆண்டிற்கான ஏனைய விபரமான வருமானம் | | 3,058,557 | 10,707,977 |
| ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானம் | | **208,257,584** | **420,272,901** |
| தலா ஒரு பங்கிற்கான அடிப்படை உழைப்பு | 11 | 9.68 | 19.27 |

இந் நிதிக் கூற்றுக்களின் ஓர் உள்ளடக்கப்பட்ட பகுதியாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு அமைகின்றது அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் கழிப்பனவைக் குறிக்கும்.

வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டிவெலப்மன்ட் தனியார் கம்பனி

**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 12/31/2023 | 12/31/2022 (திருத்தப்பட்டது) | 1/1/2022 |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஆதன, இயந்திர உபகரணங்கள் | 12 | **15,904,863** | **18,911,540** | **21,995,384** |
| அருவகச் சொத்துக்கள் | 13 | - | - | - |
| முதலீட்டு ஆதனம் | 14 | 3,404,248,861, | 3,214,000,001 | 2,822,400,001 |
| உரிமையாளர் – குடியிருப்பு ஆதனம் | 14 | 43,751,140 | 40,000,000 | 28,600,000 |
| பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் | 10 | - | 2,256,498 | 758,871 |
| | | **3,463,904,864** | **3,275,168,039** | **2,873,754,256** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| இருப்புகள் | 15 | 235.316,350 | 244,168,504 | 244,450,590 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 16 | 61,810,294 | 54,796,117 | 52,446,887 |
| இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலான முதலீடுகள் கழி | 17 | 386,615 | 387,935 | 381,050 |
| முதிர்வு முதலீடுகள் | 18 | 57,727,719 | 58,930,486 | 76,328,075 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 19 | 42,466,361 | 15,737,082 | 20,950,086 |
| தொடர்புபட்ட தரபபினரிடம் இருந்து பெறவேண்டிய தொகை | 20 | 4,341,529 | 4,341,529 | - |
| | | **402,048,868** | **378,361,653** | **394,556,688** |
| **மொத்த சொத்துக்கள்** | | **3,865,953,732** | **3,653,529,693** | **3,268,310,944** |
| **உரிமை மூலதனம்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 21 | 212,004,020 | 212,004,020 | 212,004,020 |
| பிடித்து வைத்த உழைப்பு | | 3,459,423,016 | 3,257,206,134 | 2,849,894,872 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 22,502,640 | 18,751,500 | 7,351,500 |
| | | **3,693,929,676** | **3,487,961,654** | **3,069,250,392** |
| **பொறுப்புகள்** | | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | | |
| குத்தகைப் பொறுப்புகள் | 22 | - | - | 2,555,028 |
| ஊழியர் நலன்கள் | 23 | 9,577,557 | 8,672,812 | 8,300,394 |
| | | **9,577,557** | **8,672,812** | **10,855,422** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 24 | 154,204,115 | 151,943,010 | 180,984,531 |
| குத்தகைப் பொறுப்புகள் | 22 | - | 2,555,018 | 3,189,185 |
| தொடர்புபட்ட தரப்பினருக்கான நிலுவைத் தொகை | 25 | - | - | 672,301 |
| நடைமுறை வருமான வரிப் பொறுப்பு | 26 | 4,054,846 | 2,397,200 | 3,359,113 |
| பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு | 10 | 4,187,538 | - | - |
| மொத்தப் பொறுப்புகள் | | **162,446,499** | **156,895,228** | **188,205,130** |
| மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும் | | **172,024,056** | **165,568,040** | **199,060,552** |
| | | **3,865,953,732** | **3,653,529,693** | **3,268,310,944** |

இந் நிதிக் கூற்றுக்களின் ஓர் உள்ளடக்கப்பட்ட பகுதியாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு அமைகின்றது.
இந் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

**சிரேஷ்ட முகாமையாளர் – கணக்குகள்**

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவதற்கான பொறுப்பை கம்பனியின் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. இந் நிதிக் கூற்றுக்கள் கம்பனிப் பணிப்பாளர் சபைக்காகவும் அவர்களது சார்பாகவும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்** **பணிப்பாளர்**

**உரிமை மூலதன மாற்றக் கூற்று**

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது

| | கூறப்பட்ட மூலதனம் | பிடித்து வைத்த வருமானம் | மீள்மதிப்பீட்டு மிகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2022 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **212,004,020** | **2,848,333,232** | **7,351,500** | **3,067,688,752** |
| **ஆண்டிற்கான விபரமான வருமானம்** | | 409,564,924 | | 409,564,924 |
| ஆண்டிற்கான இலாபம் | | - | | - |
| முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் | | (2,289,562) | | (2,289,562) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | (692,023) | 11,400,000 | (10,707,977) |
| ஏனைய விபரமான (செலவினம்)/ வருமானம் | 212,004,020 | 406,583,339 | 11,400,000 | 417,983,339 |
| **2023 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | 212,004,020 | 3,254,916,571 | 18,751,500 | 3,485,672,092 |
| **ஆண்டிற்கான விபரமான வருமானம்** | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | 205,199,028 | - | 205,199,028 |
| ஏனைய விபரமான (செலவினம்)/ வருமானம் | - | (692,584) | 3,751,140 | 3,058,557 |
| **ஆண்டி மொத்த விபரமான வருமானம்** | **-** | **204,506,444** | **3,751,140** | **208,257,584** |
| **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **212,004,020** | **3,459,423,016** | **22,502,640** | **3,693,929,677** |

இந் நிதிக் கூற்றுக்களின் ஓர் உள்ளடக்கப்பட்ட பகுதியாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு அமைகின்றது அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் கழிப்பனவைக் குறிக்கும்.

## வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டிவெலப்மன்ட் தனியார் கம்பனி
## காசுப்பாய்ச்சல் கூற்று

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது

| | 2023 | 2022 (திருத்தப்பட்டது) |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருநதான காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன் இலாபம் | 225,919,819 | 413,544,071 |
| **பின்வருவனவற்றிற்கான சீராக்கங்கள்** | | |
| பெறுமானத் தேய்வு | 3,176,797 | 3,186,711 |
| முதலீட்டு ஆதனத்தின் மீதான நியாயப் பெறுமதி இலாபம் | (189,365,160) | (391,419,086) |
| ஆதன, இயந்திர உபகரணங்கள் பதிவழிப்பு | 365,062 | - |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளுக்கான பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடு | | 2,794,131 |
| பெறுமதி இழப்பிற்கான ஏற்பாட்டின் மீளல் | (4,448,390) | - |
| பதவியணிக் கிரய முற்கொடுப்பனவிலான குறைப்பு | (106,000) | |
| எப்வீரீபீஎல் இல் கொண்டு செல்லப்பட்ட முதலீடுகளில் இருந்தான நியாயப் பெறுமதி இலாபம்/ நட்டம் | (549) | (16,335) |
| ஊழிய நலனிற்கான ஏற்பாடு | 1,854,830 | 1,503,527 |
| வட்டிச் செலவினம் | (128,389) | (532,377) |
| ஈடுசெய்யப்பட்ட வருமான வரி | (5,075,355) | - |
| வட்டி வருமானம் | (11,045,324) | (11,584,945) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களின் முன்னரான செயற்பாட்டு (நட்டம்/ இலாபம்** | **21,147,340** | **17,475,6987** |
| | | |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| இருப்புகளின் குறைவு/ (அதிகரிப்பு) | 8,852,154 | 282,086 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டியவை குறைவு/ (அதிகரிப்பு) | (2,459,787) | (5,143,360) |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை அதிகரிப்பு /(குறைவு) | 2,261,105 | (29,041,522) |
| தொடர்புபட்ட தரப்பினரிடம் இருந்தான நிலுவைகளின் குறைவு/ (அதிகரிப்பு) | - | (5,013,830) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான/ (பயன்படுத்தப்பட்ட) காசு** | **29,800,812** | **(21,440,929)** |
| செலுத்தப்பட்ட வட்டி | 128,389 | 532,377 |
| செலுத்தப்பட்ட ஊழிய நலன்கள் | (1,939,490) | (2,119,713) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (7,246,933) | (6,142,105) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (2,289,562) | (1,561,640) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான உருவான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | **18,453,217** | **(30,732,010)** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதன, பொறி, உபகரணங்களின் கொள்வனவு | (535,180) | (102,868) |
| எப்வீரீபீஎல் இல் கொண்டு செல்லப்பட்ட முதலீடுகளில் இருந்தான தேறிய பெறுகை | 1,110 | 26,397 |
| முதிர்விற்காக உள்ள முதலீடுகளில் இருந்தான தேறிய பெறுகை | - | 20,000.000 |
| பெற்ற வட்டி | 12,248,851 | 8,965,587 |
| முதலீட்டு ஆதனச் சேர்ப்பனவு | (883,700) | (180,914) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) இருந்தான தேறிய காசு** | **10,831,081** | **28,708,202** |

| | | |
|---|---|---|
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| நிதிக் குத்தகையின் தேறிய (கொடுப்பனவுகள்)/ சேர்ப்பனவுகள் | (2,555,018) | (3,189,195) |
| **நிதி நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) இருந்தான தேறிய காசு** | **(2,555,018)** | **(3,189,195)** |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் தேறிய மாற்றங்கள் | 26,729,279 | (5,213,003) |
| ஆண்டின் ஆரம்பத்திலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | 15,737,082 | 20,950,085 |
| **ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் (குறிப்பு 19)** | **42,466,361** | **15,737,082** |

இந் நிதிக் கூற்றுக்களின் ஓர் உள்ளடக்கப்பட்ட பகுதியாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு அமைகின்றது அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் கழிப்பனவைக் குறிக்கும்.

1. **அறிக்கையிடல் நிறுவனம்**

1.1 **குடியிருப்பு மற்றும் சட்ட வடிவம்**

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 145 ஆம் பிரிவின் கீழ் 1994 யூலை 13 ஆம் திகதி இலங்கையில் கூட்டமைக்கப்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு -04, பம்பலப்பிட்டி, புகையிரத நிலைய வீதி, கோபுரக் கட்டிடம் 25 ½ இல் அமைந்துள்ளது.

1.2 **முதன்மைச் செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை**

கம்பனியின் முக்கிய செயற்பாடாக அடுக்குமாடிக் குடியிருப்புகளை வாடகைக்கு வழங்குவதையும் ஆதன அபிவிருத்தி விற்பனையையும் குறிப்பிடலாம்.

1.3 **தாய் நிறுவனம் மற்றும் இறுதியான தாய் நிறுவனம்**

இக் கம்பனி, இலங்கை சனநாயக சோசலிவக் குடியரசின் அரசாங்கத்திற்குச் சொந்தமான நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் கூட்டாகக் கட்டுப்படுத்தப்படும் நிறுவனமாகும். அதன் படி, நகர அபிவிருத்தி அதிகாரசபையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் முறையே ஓஷன் வியூ டெவலப்மென்ட் நிறுவனத்தின் மீது 43.4% ஆனதும் 56.6% ஆனதுமான கூட்டுக் கட்டுப்பாட்டு அதிகாரத்தைக் கொண்டுள்ளன.

1.4 **ஊழியர்களின் எண்ணிக்கை**

கம்பனி, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 45 ஊழிர்களைக் கொண்டிருந்தது. (2022 : 46)

2. **தயாரிப்பின் அடிப்படை**

2.1 **இணக்கப்பாட்டுக் கூற்று**

நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காய்வு நிறுவகத்தால் (சீஏ ஸ்ரீ லங்கா) விதந்துரைக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (எஸ்எல்எப்ஆர்எஸ்) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்) மற்றும் 2007 இன் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குவதனை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.

2.2 **அளவீட்டு அடிப்படை**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் அடிப்படையில் மாற்று முறையொன்றில் மதிப்பிடப்படும் பின்வரும் விடயங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலான முதலீடுகள்
- நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் முதலீட்டு ஆதனம்
- ஊழியர் நலன்கள்

2.3 **நடைமுறையிலும் வெளிப்படுத்தலிலுமான நாணயம்**

கம்பனியின் நடைமுறை நாணயமான இலங்கை ரூபாவில் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 **மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் பயன்பாடு**

எஸ்எல்எப்ஆர்எஸ்/எல்கேஏஎஸ் இற்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களிற்கு கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடல், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களது தீர்ப்புகளை முகாமைத்துவத்தால் மேற்கொள்ள வேண்டப்படுகின்றது. இம் மதிப்பீடுகளில் இருந்து உண்மையான முடிவுகள் வேறுபடக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடுகள் திருத்தப்பட்ட காலத்திலும் எதிர்காலத்தில் பாதிக்கப்படும் காலத்திலும் கண்டறியப்படுகின்றன.

இந் நிதிக்கூற்றுக்களில் கண்டறியப்பட்ட தொகைகளில் பாரிய அளவில் குறிப்பிடத்தக்க விளைவுகளைக் கொண்ட கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் மதிப்பீடுகள், நிச்சயமற்ற தன்மை மற்றும் முக்கியமான தீர்ப்புகளின் முக்கிய பகுதிகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 3.2.1 வியாபாரப் பெறவேண்டியவைகளின் குறைபாடு
குறிப்பு 3.3.3 பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு
குறிப்பு 3.4 அசையாச் சொத்துக்களின் காலக்கழிவு
குறிப்பு 3.10 ஊழியர் நலக் கடப்பாடுகள்
குறிப்பு 3.11 நிகழத்தக்க பொறுப்புகள்
குறிப்பு 3.17 பிற்போடப்பட்ட வரி

**அ. நியாய பெறுமதியில் அளவிடுதல்**

நிறுவனத்தின் பல நிதி மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகிய இரண்டிற்குமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் நியாயமான மதிப்புகளை அளவிடுவது அவசியமாகும்.

குறிப்பிடத்தக்க கவனத்தில் தவறக் கூடிய உள்ளீடுகள் மற்றும் மதிப்பீட்டு மாற்றங்களை கம்பனி ஒழுங்குமுறைகள் தொடர்ந்து மீளாய்வு செய்கின்றன. நியாயமான மதிப்புகளை அளவிடுவதற்கு மூன்றாம் தரப்பின் தகவல் பயன்படுத்தப்பட்டிருப்பின், அத்தகைய மதிப்பீடுகள் வகைப்படுத்தப்பட வேண்டிய நியாயமான மதிப்பு படிநிலையின் நிலை உட்பட அத்தகைய மதிப்பீடுகள் (எஸ்எல்எப்ஆர்எஸ்) இன் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்றன என்ற முடிவிற்கு வரக் கூடிய வகையில் மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெற்ற சான்றுகளை கம்பனி மதிப்பிடுகிறது.

ஒரு சொத்து அல்லது பொறுப்பின் நியாயப் பெறுமதியை அளவிடுகையில் கம்பனி இயன்றவரை கண்காணிக்கக் கூடிய சந்தைத் தரவுகளைப் பயன்படுத்துகின்றது. பின்வரும் மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி உள்ளீடுகளின் அடிப்படையில் நியாயமான மதிப்புகள் நியாயமான மதிப்பீட்டுப் படிநிலைகளில் வெவ்வேறு நிலைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| படிநிலை | 1 | : | ஒரே மாதிரியான சொத்துக்கள் மற்றும் பொறுப்பிற்காகச் செயற்படும் சந்தைகளில் குறிப்பிடப்பட்ட விலைகள் (சீராக்கப்படாதவை) |
| படிநிலை | 2 | : | நேரடியாக (அதாவது விலைகளாக) அல்லது நேரில் முறையில் (விலைகளில் இருந்து பெறப்பட்டவை) சொத்து அல்லது பொறுப்பாகக் காணக்கூடிய படிநிலை 1 இல் சேர்க்கப்பட்டுள்ள குறிப்பிடப்பட்ட விலையைத் தவிர ஏனைய உள்ளீடுகள் |
| படிநிலை | 3 | : | கண்காணிக்கக் கூடிய சந்தைத் தரவின் அடிப்படையில் அல்லாத சொத்துக்கள் அல்லது பொறுப்புகளுக்கான உள்ளீடு (கண்காணிக்க இயலாத உள்ளீடுகள் |

ஒரு சொத்து அல்லது பொறுப்பின் நியாயமான பெறுமதியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் நியாயமான பெறுமதிப் படிநிலையின் வெவ்வேறு படிநிலைகளிற்கு உட்படுமாயின், முழு அளவீட்டிற்கும் குறிப்பிடத்தக்க வகையில் நியாயமான பெறுமதி அளவீடு முழுவதுமாக நியாயப் பெறுமதி படிநிலையின் அதே நிலையில் குறைந்த நிலை உள்ளீடாக வகைப்படுத்தப்படுகின்றது.

மாற்றம் நிகழ்ந்த அறிக்கையிடற் காலப்பகுதியின் இறுதியில் நியாயப் பெறுமதிப் படிநிலையின் நிலைகளிற்கு இடையேயான பரிமாற்றங்களை கம்பனி அங்கீகரிக்கின்றது.

**3. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் இந் நிதி நிலை அறிக்கைகளில் வழங்கப்பட்ட அனைத்து காலகட்டங்களின் போதும் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**3.1 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்கள்**

வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்கள், பரிமாற்றத் திகதிகளில் நிலவும் அந்நிய செலாவணி விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாய்க்கு பரிமாற்றப்படுகின்றன.

அந்நிய செலாவணிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணச் சொத்துக்களும் பொறுப்புகளும், அறிக்கையிடற் திகதியில் நிலவும் அந்நிய செலாவணி விகிதத்தில் இலங்கை ரூபாய்க்கு பரிமாற்றப்படுகின்றன. அந்நிய செலாவணிகளில் குறிப்பிடப்பட்ட வரலாற்றுக் கிரயத்திலான பணம்சாராச் சொத்துக்களும் பொறுப்புகளும், பரிமாற்றத் திகதியில் நிலவும் பரிமாற்றல் விகிதத்தில் இலங்கை ரூபாய்க்கு பரிமாற்றப்படுகின்றன.

அந்நிய செலாவணிகளில் குறிப்பிடப்பட்ட நியாயப் பெறுமதியிலான பணம்சாராச் சொத்துக்களும் பொறுப்புகளும், அப் பெறுமதி குறிப்பிடப்பட்ட திகதியில் நிலவும் பரிமாற்றல் விகிதத்தில் இலங்கை ரூபாய்க்கு பரிமாற்றப்படுகின்றன.

பரிமாற்றங்களால் ஏற்படும் அந்நிய செலாவணி வேறுபாடுகள் இலாப நட்டக் கணக்குக் கூற்றில் வெளிப்படுத்தப்படுகின்றன.

**3.2 நிதிக் கருவிகள்**

**3.2.1 வழித்தோன்றல் அல்லாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் - அங்கீகரிப்பும் அங்கீகரிப்பின்மையும்**

கம்பனி, ஆரம்பத்தில் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைளை அவை உருவாகும் திகதியில் அங்கீகரிக்கின்றது. ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் கருவியின் ஒப்பந்த விதிகளுக்கு அமைவாக கம்பனி ஒரு தரப்பாக மாற்றமடைகையில் வர்த்தகத் திகதியின் ஆரம்பிப்பதில் அங்கீகரிக்கப்படுகின்றன.

சொத்திலிருந்து பணப்புரிமாற்றலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகும் போது அல்லது நிதிச் சொத்துக்களது உரிமையின் இடர்கள், வெகுமதிகள் அனைத்தும் கணிசமான அளவில் மாற்றமடைகையில் ஒரு பரிவர்த்தனையில் ஒப்பந்த பணப் பரிமாற்றம் பெறப்படுவதற்கான உரிமைகள் மாற்றப்படுகையில் அல்லது உரிமைகளின் இடர்கள் வெகுமதிகள் அனைத்தையும் பாரிய அளவில் தக்கவைத்துக்கொள்ளவோ அல்லது மாற்றாத நிலையில் மாற்றப்பட்ட சொத்தின் மீதான கட்டுப்பாடு தக்கவைக்கப்படாத போது கம்பனி நிதிச் சொத்தை அங்கீகரிப்பதில்லை.

கம்பனி அதன் ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்ததும் அல்லது இரத்துச் செய்யும் போது அல்லது காலாவதியாகும் போது நிதிப் பொறுப்பை அங்கீகரிப்பதில்லை.

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் ஈடுசெய்யப்பட்டு நிதிநிலைமைக் கூற்றில் தேறிய தொகை வெளிப்படுத்தப்படும். ஈடு செய்வதற்கான சட்டபூர்வ உரித்தை கம்பனி கொண்டிருக்கையில், அவற்றைத் தேறிய அடிப்படையில் தீர்த்துவைப்பதற்கு உத்தேசித்துள்ள போது அல்லது தேறும் சொத்துக்களின் மூலம் பொறுப்புக்களை ஒரே சமயத்தில் தீர்ப்பதற்கும் இதனை மேற்கொள்கின்றது.

**3.2.2 வழித்தோன்றல் அல்லாத நிதிச் சொத்துக்கள் - அளவீடுகள்**

**இலாப நட்டங்களின் மூலம் நியாயப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள்**

ஓர் நிதிச் சொத்தானது வர்த்தகத்திற்காக வகைப்படுத்தப்படுகையில் அல்லது ஆரம்பத்திலேயே அத்தகையதாக வகைப்படுத்தப்படுகையில் நியாயப்பெறுமதியில் இலாப நட்டக் கணக்கில் வகைப்படுத்தப்படும். நேரடியாக ஏற்கப்படும் கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் இலாப நட்டத்தில் ஏற்கப்பட்டதாக அங்கீகரிக்கப்படும். இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்களும் ஏதேனும் வட்டிகள் அல்லது பங்கிலாப வருமானம் உட்பட அதற்கான மாற்றங்களும் நியாயப் பெறுமதியில் கணிப்பிடப்படும். இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலான ஓர் நிதிச் சொத்து திறைசேரி உண்டியலிலான முதலீட்டையும் உள்ளடக்கும்.

**முதிர்விற்காக உள்ள நிதிச் சொத்துக்கள்**

இச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான மதிப்பையும் நேரடியாகக் கூறக்கூடிய பரிவர்த்தனைக் கிரயத்திலும் அளவிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தை அடுத்து, அவை பயனுள்ள வட்டி முறைமைப் பயன்படுத்தி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன. முதிர்விற்காக உள்ள நிதிச் சொத்தில நிலையான வைப்புக்களிலான முதலீடுகளும் அடங்கும்.

**கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்**

இச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான மதிப்பையும் நேரடியாகக் கூறக்கூடிய பரிவர்த்தனைக் கிரயத்திலும் அளவிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தை அடுத்து, அவை பயனுள்ள வட்டி முறைமைப் பயன்படுத்தி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன. இதில் வர்த்தக மற்றும் பிற பெறவேண்டிய தொகைகளும் காசு மற்றும் காசிற்குச் சமமானவையும் அடங்கும்.

**3.2.3 வழித்தோன்றல் அல்லாத நிதி பொறுப்புகள் - அளவீடு**

வழித்தோன்றல் அல்லாத நிதிப் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் இருந்து ஏதேனும் நேரடியாக கூறப்படும் பரிவர்த்தனைச் செலவுகளைக் கழித்து அளவிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தை அடுத்து, இப் பொறுப்புக்கள் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி குறைத்த பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

**3.3 ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள்**

**3.3.1 அங்கீகாரம் மற்றும் அளவீடு**

ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் பொருட்கள், கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரட்டப்பட்ட குறைபாட்டு இழப்புகளைக் கழித்து அளவிடப்படுகின்றன.

ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் ஒரு பொருளின் குறிப்பிட்ட பகுதிகள் வெவ்வேறு பயனுள்ள வாழ்க்கைக் காலத்தைக் கொண்டிருக்குமாயின், அவை ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் தனிப் பொருளாகக் கணக்கிடப்படுகின்றன. ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் ஒரு பொருளை அகற்றுவதனால் ஏற்படும் இலாபமோ அல்லது நட்டமோ எதுவானாலும் இலாப நட்டமாக அங்கீகரிக்கப்படும்.

### 3.3.2 தொடர் செலவினங்கள்

செலவினத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதாரப் பலன்கள் கம்பனிக்குக் கிடைக்கும் என்பதற்கான சாத்தியம் இருப்பின் மாத்திரமே தொடர் செலவினங்கள் மூலதனமாக்கப்படும்.

### 3.3.3 பெறுமானத்தேய்வு

ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் பொருட்களது கிரயத்தில் இருந்து நேர்கோட்டு அடிப்படையில் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்க்கைக் காலத்தின் அடிப்படையிலான தேறிய குறைத்தெழுதிய பெறுமதியைக் கழித்து கணிப்பிடப்பட்டு இலாப நட்டத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

நடைமுறை மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்க்கைக் காலம் பின்வருமாறானதாகும்.

| | |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 10 ஆண்டுகள் |
| அலுவலக தளபாடங்கள் | 10 ஆண்டுகள் |
| இயந்திர உபகரணங்கள் | 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 10 ஆண்டுகள் |

சொத்துக்கள் பயன்படுத்தப்படும் திகதியிலிருந்து அகற்றப்படும் திகதி வரை பெறுமானத்தேய்வு விதிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் பெறுமானத்தேய்வு முறைகள் பயனுள்ள வாழ்க்கை மற்றும் எஞ்சிய மதிப்புகள் மீளாய்வு செய்யப்பட்டு, பொருத்தமானதாக இருப்பின் சீராக்கப்படும்.

**கணக்கியல் மதிப்பீட்டில் மாற்றம்**

| | |
|---|---|
| மாற்றத்தின் பெயர் | மோட்டார் வாகனத்தின் பயன்படு ஆயுட் காலம் 5 முதல் 10 ஆண்டுகள் 2021 பின்னிருந்து. |

### 3.3.4 குத்தகைகள்

குத்தகையின் விதிமுறைகளில் குத்தகைக்கிடப்பட்ட சொத்தின் உரிமையின் அனைத்து இடர்களும் வெகுமதிகளும் கணிசமாக மாற்றமடைகையில் குத்தகை நிதிக் குத்தகையாக வகைப்படுத்தப்படும். ஏனைய அனைத்துக் குத்தகைகளும் செயற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்படுகின்றன.

நிதிக் குத்தகையின் கீழ் வைத்திருக்கும் சொத்துக்களுக்கான உரிமைகள், குத்தகையின் தொடக்கத்தில் குத்தகைக்கிடப்பட்ட சொத்தின் நியாயமான மதிப்பில் (அல்லது குறைவாக இருப்பின், குறைந்த பட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதி) நிறுவகத்தின் சொத்துக்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. குத்தகைப் பொறுப்பாக (நிதிக் குத்தகைக் கடப்பாடுகள்) குத்தகைதாரருக்கு தொடர்புடைய பொறுப்பு நிதிநிலைக்கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளது. பொறுப்பின் எஞ்சிய மீதியின் மீதான வட்டி விகிதம் சமனாக இருப்பதற்காக குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிக் கட்டணங்களிற்கும் குறைந்த குத்தகைக் கடப்பாட்டிற்கும் இடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இலாப நட்ட அளவீட்டில் நிதிக் கட்டணங்கள் கழிக்கப்படுகின்றன. நிதிக் குத்தகையின் கீழ் உள்ள சொத்துக்கள், ஆதனங்கள், இயந்திர உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டு சொந்தச் சொத்துக்களைப் போன்று பெறுமானத்தேய்விடப்பட்டு குறைபாட்டு இழப்புகளுக்கும் மதிப்பிடப்படுகின்றன.

**3.4 அருவகச் சொத்துக்கள்**

அருவகச் சொத்து என்பது அல்லாத அடையாளம் காணக்கூடிய நிதிசாராச் சொத்தாகும். இது பௌதீக ரீதியற்ற, உற்பத்தி அல்லது பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல் அல்லது நிர்வாக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும்.

**அங்கீகாரத்தின் அடிப்படை**

சொத்துக்களுக்கான எதிர்காலப் பொருளாதாரப் பலன்கள் கம்பனிக்குக் கிடைக்கக் கூடிய மற்றும் சொத்துக்களின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படக்கூடிய சாத்தியம் இருப்பின் அருவகச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படும்.

**காலக்கழிவு**

கம்பனியின் கணனி மென்பொருள் அடங்கலான அருவகச் சொத்துக்கள்,நேர்கோட்டின் அடிப்படையில் அவற்றின் மதிப்பிடப்பட்ட பொருளாதார ஆயட்காலத்திற்கு அமைவாக காலக்கழிவிடப்படுகின்றன. அவை அசையாச் சொத்துக்கள் பாதிக்கப்படலாம் என்பதற்கான அறிகுறி தென்படுகையில் அவை சேதஇழப்பிற்காக மதிப்பிடப்படும்.

தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயட்காலம் பின்வருமாறாகும்.

மென்பொருள் 10 ஆண்டுகள்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் காலக்கழிவு முறைகள், பயனுள்ள ஆயட்காலம் மற்றும் கைக்கெட்டிய பெறுமதி மீளாய்வு செய்யப்படுகின்றன.

**அங்கீகார நீக்கம்**

ஓர் அருவகச் சொத்து அகற்றப்படுகையில் அல்லது அதன் பயன்பாட்டில் இருந்து எதிர்காலப் பொருளாதாரப் பலன்கள் எதுவும் எதிர்பார்க்கப்படாத போது அதைத் தொடர்ந்து அகற்றுகையில் அது அங்கீகரிக்கப்படுவதில்லை.

**3.5 முதலீட்டுச் சொத்து**

முதலீட்டுச் சொத்து ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. பின்னர் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு மாற்றம் ஏற்படின் அவை இலாபம் அல்லது நட்டத்தில் கொண்டு செல்லப்படும்.

முதலீட்டுச் சொத்து அகற்றலின் மீதான ஏதேனும் இலாபமும் நட்டமும் (பொருள் அகற்றல் மூலம் கிடைக்கப்பெறும் நிகர வருமானத்திற்கும், பொருளைக் கொண்டு செல்லும் தொகைக்கும் இடையேயான வேறுபாடாகக் கணக்கிடப்படுகின்றது.) இலாப நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முன்னர் ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள் என வகைப்படுத்தப்பட்ட முதலீட்டுச் சொத்துக்கள் விற்கப்படுகையில், மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஏனேும் தொடர்புடைய தொகை பிடித்துவைத்த வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

கம்பனி, தன்னிடம் உள்ள ஆதனத்தில் குடியிருப்பவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு போன்ற துணைச் சேவைகளை வழங்குகின்றது. கம்பனி, ஒட்டுமொத்த ஏற்பாட்டிற்கும் சேவைகள் முக்கியமற்றதான போதிலும் அத்தகைய ஆதனத்தை முதலீட்டுச் சொத்தாகக் கருதுகின்றது.

**3.6 இருப்புகள்**

இருப்புகளில், காணி, அறிக்கையிடற் திகதியின் படி, பூர்த்தியான வீடுகள் மற்றும் நடைமுறை வேலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இருப்புகள், குறைந்த விலை மற்றும் தேறிய கைக்கெட்டும் பெறுமதியில் கணிப்பிடப்படுகின்றன. இருப்புகளின் கிரயம், உண்மையான செலவை அடிப்படையாகக் கொண்டதுடன் அது இருப்புகளைப் பெறுவதில் ஏற்படும் செலவுகள், உற்பத்தி அல்லது பரிமாற்றல் செலவுகள் மற்றும் அவற்றை அவற்றின் தற்போதைய இருப்பிடத்திற்கும் நிலைக்கும் கொண்டு வருவதற்கான பிற செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும்.

நடைமுறை வேலை என்பது அறிக்கையிடும் திகதியில் முழுமையடையாதுள்ள வேலைகளைக் குறிக்கின்றதுடன் இணைக்கப்படும் இறுதி உற்பத்திகளின் கிரயத்திற்கு அல்லது அதற்கு மேல் விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதால், அவை கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட திட்டங்களுடன் நேரடியாக தொடர்புடைய அனைத்துச் செலவினங்களும் கிரயத்தில் உள்ளடக்கப்படும்.

### 3.7 சேத இழப்புகள்

### 3.7.1 வழித்தோன்றல் அல்லாத நிதிச் சொத்துக்கள்

உரிமை மூலதனமாகக் கணக்கிடப்பட்ட முதலீட்டாளருக்கான வட்டி உள்ளடங்கலாக, இலாப நட்டத்தின் மூலம் நியாயப் பெறுமதியில் வகைப்படுத்தப்படாத நிதிச் சொத்துக்கள், ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் சேத இழப்பிற்கான புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதனைத் தீர்மானிப்பதற்காக மதிப்பிடப்படுகின்றது.

நிதிச் சொத்துக்கள் சேத இழப்புகளிற்கு உட்படுகின்றன என்பதற்கான புறநிலைச் சான்றுகள் பின்வருமாறாகும்.

- கடன்பட்டோரின் இயல்பு நிலை அல்லது தவறு
- கம்பனி வழமையில் அல்லாது கருத்திற்கொள்ளாத விதிமுறைகளின் அடிப்படையில் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகையை மறுசீரமைத்தல்,
- கடன்பட்டோர் அல்லது வழங்குபவர் முறிவு நிலைக்கு உட்படுவார் என்பதற்கான அறிகுறிகள்,
- கடன்பெறுனர் அல்லது வழங்குபவர்களின் கட்டண நிலையில் பாதகமான மாற்றங்கள்,
- நிதிச் சிக்கல்கள் காரணமாக பிணைக்காக ஓர் இயக்க நிலைச் சந்தை இன்மை,
- நிதிச் சொத்துக்கள் உள்ள கம்பனியிலிருந்து எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களில் குறைவு இருப்பதை அளவிடக்கூடிய வகையில் அவதானிக்கத்தக்க தரவு.

காலக்கழிவுக் கிரய அடிப்படையில் அறவிடப்பட்ட நிதிசார் சொத்துக்கள்

ஒரு தனிப்பட்ட சொத்தாகவும் கூட்டான நிலையிலுமான இரு வகையிலும் இச் சொத்துக்களுக்கான காலக்கழிவிற்கான ஆதாரங்களை கம்பனி கருத்திற்கொள்கின்றது. தனித்தனி முக்கியத்துவம் வாய்ந்த சொத்துக்கள் அனைத்தும் காலக்கழிவிற்காக தனித்தனியாக மதிப்பிடுகின்றன. காலக்கழிவிற்கு உட்பட்டிராத, தனியாக இதுவரையில் இனங்காணப்பட்டிராத எந்த ஓர் காலக்கழிவிற்கும் உட்பட வேண்டியவை கூட்டாக காலக்கழிவிற்காக மதிப்பீடு செய்யப்படும். தனித்தனியாக முக்கியத்துவம் பெறாத சொத்துக்கள் காலக்கழிவிற்காக கூட்டாக மதிப்பிடப்படுகின்றன. ஒரே வகையான இடர் குணாதிசயங்களைக் கொண்ட சொத்துக்களை ஒன்றிணைத்து கூட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

கூட்டுக் காலக்கழிவை மதிப்பிடுகையில், கம்பனி மீட்டெடுக்கும் நேரம் மற்றும் ஏற்பட்ட இழப்பின் அளவு பற்றிய வரலாற்றுத் தகவல்களைப் பயன்படுத்துகின்றது. மேலும் தற்போதைய பொருளாதார மற்றும் கடன் நிலைமைகள் வரலாற்றுப் போக்குகளால் பரிந்துரைக்கப்பட்டதைப் பார்க்கிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பின் அது சீராக்கப்படுகின்றது.

ஒரு காலக்கழிவிற்கான இழப்பு என்பது ஒரு சொத்தின் கொண்டு செல்லும் தொகைக்கும் சொத்தின் உள்ளபடியான பயனுள்ள வட்டி விகிதத்தில் தள்ளுபடி செய்யப்படும் மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்புழக்கங்களின் தற்போதைய மதிப்பிற்கும் இடையேயான வித்தியாசமாகக் கணக்கிடப்படுகின்றது. நட்டங்கள், இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, கொடுப்பனவுக் கணக்கில் வெளிப்படுத்தப்படுகின்றன. சொத்தை மீட்டெடுப்பதற்காக உண்மையான வாய்ப்புகள் இல்லை என கம்பனி கருதுகையில் தொடர்புடைய தொகைகள் பதிவழிக்கப்படும். காலக்கழிவிற்கான இழப்பின் அளவு பின்னர் குறைவடைந்து அக் குறைபாடு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நிகழும் நிகழ்விற்குப் புறநிலையாக தொடர்புடையதாக இருப்பின், முன்னர் அங்கீகரிக்கப்பட்ட காலக்கழிவிற்கான இழப்பு இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்படும்.

### 3.7.2 நிதிசாராச் சொத்துக்கள்

ஓவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் கம்பனி, அதன் நிதிசாராச் சொத்துக்களின் பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் தவிர) ஏதேனும் சேதஇழப்புகள் உள்ளதா என்பதனைத் தீர்மானிப்பதற்காக மதிப்பாய்வு செய்கின்றது. அத்தகைய அறிகுறி ஏதேனும் இருப்பின் சொத்தின் மீட்டெடுக்கக் கூடிய தொகை மதிப்பிடப்படும்.

சேத இழப்புச் சோதனைக்காக சொத்துக்கள், ஏனைய சொத்துக்கள் அல்லது சீஜீயூ களின் காசுப்பாய்ச்சல்களில் இருந்து பெரும்பாலும் சுயாதீனமான, தொடர்ச்சியான பயன்பாட்டிலிருந்து காசுப்பாய்ச்சலை உருவாக்கும் சொத்துக்களின் சிறிய குழுவாக தொகுக்கப்படுகின்றன.

ஒரு சொத்தின் அறவிடக்கூடிய தொகை அல்லது சீஜீயூ என்பது அதன் பயன்பாட்டுப் பெறுமதி மற்றும் நியாயப் பெறுமதியில் இருந்து விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்டதைப் பார்க்கிலும் கூடியதாகும்.
பயன்பாட்டுப் பெறுமதி, எதிர்கால காசுப்பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டு வரிக்கு முன்னைய தள்ளுபடி விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய மதிப்பிற்குத் தள்ளுபடி செய்யப்படுகின்றது. இது சொத்து அல்லது காசு உருவாக்கல் அலகின் (சீஜீயூ) தொடர்பான இடர்களின் பணத்தின் நேர மதிப்பையும் தற்போதைய சந்தை மதிப்பீடுகளையும் பிரதிபலிக்கின்றது.

ஒரு சொத்து அல்லது காசு உருவாக்கல் அலகின் கொண்டு செல்லும் அளவு அதன் அறவிடக்கூடிய தொகையைப் பார்க்கிலும் கூடுதலானதாயின் ஓர் சேத இழப்பு அங்கீகரிக்கப்படுகின்றது.

சேத இழப்புகள் இலாப நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. அவை ஆரம்பத்தில் சீஜீயூ இற்கு ஒதுக்கப்பட்ட நன்மதிப்பின் கொண்டுசெல்லல் தொகையைக் குறைப்பதற்கும், பின்னர் சீஜீயூ இல் உள்ள ஏனைய சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகையையும் விகிதாசார அடிப்படையில் குறைப்பதற்காக ஒதுக்கப்படுகின்றது.

நன்மதிப்புத் தொடர்பான ஒரு சேத இழப்பு மீட்கப்படமாட்டாது. ஏனைய சொத்துக்களுக்கான சேத இழப்பு, சொத்தின் கொண்டுசெல்லும் தொகையில் இருந்து பெறுமானத்தேய்வு அல்லது காலக்கழிவின் தேறிய மீதி நிர்ணயிக்கப்படும் அளவை விஞ்சாத அளவிற்கு மட்டுமே சேத இழப்பு அங்கீகரிக்கப்படாதவிடத்து சேத இழப்பு மீட்கப்படும்.

**3.8 பொறுப்புகள்**

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய கடப்பாடு நிலவும் போது பொறுப்புகள் நிதிநிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. பொருளாதார நன்மைகளைக் கொண்ட வளங்களின் வெளிப்பாட்டை விளைவிக்கும் என எதிர்பார்த்து அது தீர்க்கப்படுகின்றது. கோரிக்கையின் பேரில் அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய கடப்பாடுகள், நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பாகக் கருதப்படுகின்றன. அறிக்கையிடப்பட்ட திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குப் பின் செலுத்த வேண்டிய பொறுப்புகள் நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புகளாகக் கருதப்படுகின்றன.

**3.9 ஏற்பாடுகள்**

கடந்த கால நிகழ்வின் விளைவாக கம்பனிக்கு சட்டபூர்வமாக அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு இருக்கையில் நிதிநிலைமைக் கூற்றில் ஒரு ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகின்றது. மேலும், கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மையின் வெளியேற்றத்திற்கான தேவை ஏற்படலாம்.

**3.10 பணியாளர் நலன்கள்**

**அ. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம், பணிக்குப் பின்னைய ஓர் நலன்திட்டமாகும். இதன் கீழ் ஒரு கம்பனி நிலையான பங்களிப்பை ஒரு நிறுவனத்திற்குச் செலுத்துவதுடன் மேலதிகத் தொகையைச் செலுத்துவதற்கு சட்டபூர்வமாகவோ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடும் அற்றது. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்பிற்கான கடப்பாடுகள், ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் தொடர்புடைய காலத்திற்காக இலாப நட்டத்தில் ஒரு ஊழியர் நலன் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது. முற்கொடுப்பனவுப் பங்களிப்புகள், காசு மீட்பு அல்லது எதிர்காலக் கொடுப்பனவுகளின் கழிப்பனவு அளவிற்கு ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்படும்.

ஊழியர்கள், குறித்த சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு ஏற்ப ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் உரித்துடையவர்கள். ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 15 சதவீதத்தையும் 3 சதவீதத்தையும் முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் கம்பனி பங்களிப்புச் செய்கின்றது.

**ஆ. வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்**

வரையறுக்கப்பட்ட நலன் திட்டம், வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமல்லாத பணிக்குப் பின்னரான நலன் திட்டமாகும். 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன்களைச் செலுத்துவதற்கு கம்பனி பொறுப்பானதாகும். நிதி அறிக்கைகளில் வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு, அறிக்கையிடப்பட்ட திகதியின் படி வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியாகும்.

எல்கேஏஎஸ் 19 – ‘‘ஊழியர் நலன்கள்’’ இல் பரிந்துக்கப்பட்ட படி, ‘‘எதிர்வுகூறப்பட்ட அலகுக் கடன் ( பீயூசீ) முறையைப் பயன்படுத்தி அறிக்கையிடப்படும் திகதியில் உள்ள ஒரு தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர் மூலம் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடு கணக்கிடப்படுகின்றது. பொறுப்பு வெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை. சகல மதிப்பீட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் விபரமான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஒரு ஊழியருக்கான பொறுப்பு, அவரது 5 ஆண்டு காலத் தொடர்ச்சியான பணி முடிவை அடுத்து மட்டுமே எழுகின்றது.

**3.11 மூலதனப் பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்கவைகள்**

நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது பொருளாதார நன்மைகளின் மாற்றத்தில் சாத்தியமல்லாத அல்லது நம்பகத்தன்மையுடன் அளவிட இயலாத தற்போதைய கடப்பாடுகளால் மட்டுமே உறுதிசெய்யப்படக் கூடிய கடப்பாடுகளாகும். கம்பனியின் மூலதனப் பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பித்தக்க குறிப்புகளுடன் வெளிப்படுத்தப்படுகின்றன.

**3.12 அறிக்கையிடற் திகதிக்குப் பின்னைய நிகழ்வுகள்**

அறிக்கையிடற் திகதிக்குப் பின்னைய நிகழ்வுகளின் பொருண்மை கருத்திற்கொள்ளப்பட்டு, தேவைக்கேற்ற வகையில் நிதிக் கூற்றில் பொருத்தமான சீராக்கங்களும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**விரிவான வருமானக் கூற்று**

**3.13 வருமானம்**

உரிமையின் குறிப்பிடத்தக்க இடர்களும் வெகுமதிகளும் கொள்வனவாளருக்கு மாற்றப்படுகையில், பலன் பெறப்படுவதற்கான சாத்தியம் உள்ளபோது, நம்பத்தகுந்த முறையில் தொடர்புடைய செலவுகள் மற்றும் பொருட்களின் சாத்தியமான வருமானம் என்பன மதிப்பிடப்படுகையில், பொருட்களுடன் தொடர்ந்து நிர்வாக ஈடுபாடு இல்லாத நிலையிலும் வருமானத்தின் அளவை நம்பகமான முறையில் அளவிடக் கூடிய நிலையிலும் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**அ. வாடகை வருமானம்**

முதலீட்டுச் சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானம் குறித்த குத்தகைக் காலத்தின் அடிப்படையில் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**ஆ. சேவைக் கட்டணங்கள், கோபுர வருமானம் மற்றும் தரிப்பிட வருமானம்**

வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. வருமானம், வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் சேவைகளின் விலைப்பட்டியலிடப்பட்ட பெறுமதியைக் குறிக்கின்றது.

**இ. வீடுகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம்**

உரிமையின் குறிப்பிடத்தக்க இடர்களும் வெகுமதிகளும் கொள்வனவாளருக்கு மாற்றப்படுகையில், பலன் பெறப்படுவதற்கான சாத்தியம் உள்ளபோது, நம்பத்தகுந்த முறையில் தொடர்புடைய செலவுகள் மற்றும் பொருட்களின் சாத்தியமான வருமானம் என்பன மதிப்பிடப்படுகையில், பொருட்களுடன் தொடர்ந்து நிர்வாக ஈடுபாடு இல்லாத நிலையிலும் வருமானத்தின் அளவை நம்பகமான முறையில் அளவிடக் கூடிய நிலையிலும் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**ஈ. கட்டுமான ஒப்பந்தங்கள்**

கட்டுமான ஒப்பந்த வருமானம், கம்பனியின் சில வாடிக்கையாளர்களுக்கு பல வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் ஏற்படும் விளைவுகளால் அங்கீகரிக்கப்படுகின்றது. இந்த வீட்டு அலகுகள், வாடிக்கையாளர்களுடன் குறிப்பாக பேச்சுவார்த்தை ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்த வருமானத்தில், ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆரம்பத் தொகை மற்றும் ஒப்பந்த வேலைகளிலான ஏதேனும் மாற்றங்கள், உரிமை கோரல்கள் மற்றும் ஊக்குவிப்புத் தொகைக் கொடுப்பனவுகள் என்பன உள்ளடங்கும்.

ஒரு கட்டுமான ஒப்பந்தத்தின் முடிவை நம்பத்தகுந்த முறையில் மதிப்பிட முடியுமாயின் ஒப்பந்த வருமானம் ஒப்பந்த முடிவு விகிதாசார நிலைக்கு ஏற்ப இலாப நட்டத்தில் அங்கீகரிக்கப்படும். நிகழ்த்தப்பட்ட பணியின் ஆய்வுகளின் மூலம் பூர்த்தி நிலை மதிப்பிடப்படுகின்றது. அல்லாவிடில், ஒப்பந்த வருமானம், அறவிடக்கூடிய ஒப்பந்தச் செலவுகளின் அளவிற்கு மட்டுமே அங்கீகரிக்கப்படும்.

எதிர்கால ஒப்பந்தச் செயற்பாடு தொடர்பான சொத்தை உருவாக்காத வரையில் ஒப்பந்தச் செலவுகள் ஏற்பட்டதாக அங்கீகரிக்கப்படும். ஒரு ஒப்பந்தத்தில் எதிர்பார்க்கப்படும் நட்டம், இலாப நட்டத்தில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**3.14 ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம், அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**3.15 செலவுகள்**

வியாபாரத்தை நடாத்துவதற்கும் ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள் திறமையான நிலையில் பராமரிக்கப்படுவதற்கும் ஏற்கப்படும் அனைத்துச் செலவுகளும் ஆண்டிற்கான இலாபத்தைப் பெறுவதற்காக வருமானத்தில் சாட்டப்படுகின்றன.

நிரந்தரத் தன்மையிலான சொத்துக்களைப் பெறுதல், விரிவுபடுத்துதல் அல்லது மேம்படுத்தல் போன்றவற்றின் மூலம் வணிகத்தை மேற்கொள்வதற்காக அல்லது வணிகத்தின் வருமானத் திறனை அதிகரிக்கும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன.

இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டவாறு வரி விதிப்பிற்கு முன் கம்பனி ஈட்டிய இலாபமானது, அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளுக்கும் ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் பெறுமானத் தேய்வு ஆகியவற்றிற்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதை அடுத்து ஏற்பட்டதாகும்.

**3.16 நிதி வருமானம் மற்றும் கிரயங்கள்**

நிதி வருமானம், ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன், நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களிற்கான மொத்த வட்டி வருமானத்தை உள்ளடங்கியதாகும். வட்டி வருமானம் விரிவான வருமானக் கூற்றில் சேர்வதனால் அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதிச் செலவில், குத்தகைக்கான வட்டிச் செலவு, முதலீட்டாளர் நிதி மீதான வட்டி, நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி இழப்பு என்பன உள்ளடங்கும்.

**3.17 வருமான வரி**

வரிச் செலவு (வரி வருமானம்) என்பது நடைமுறை வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி தொடர்பாக குறித்த காலத்திற்கான இலாப நட்டத்தைத் தீர்மானிப்பதில் உள்ளடக்கப்பட்ட ஒட்டு மொத்தத் தொகையாகும். வரிச் செலவு, நேரடியாக உரிமை மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடையதாக இருப்பின், அது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டால் அன்றி இலாபம் அல்லது நட்டக் கூற்றில் நேரடியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

அ. நடைமுறை வருமான வரி

நடைமுறை வரியில், குறித்த ஆண்டிற்கான வரி விதிக்கத்தக்க வருமானம் அல்லது நட்டத்தில் செலுத்த வேண்டிய அல்லது பெறவேண்டியதாக எதிர்பார்க்கப்படும் வரியும் கடந்த ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய அல்லது பெறவேணடிய வரியிலான ஏதேனும் சீராக்கங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போது செலுத்த வேண்டிய அல்லது பெறவேண்டிய வரித் தொகை, வருமான வரிகள் ஏதேனும் இருப்பின் அவற்றுடன் தொடர்புபட்ட நிச்சயமற்ற நிலையைப் பிரதிபலித்து செலுத்த வேண்டிய அல்லது பெற வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் வரித் தொகை அளவீடு சிறந்த மதிப்பீடாக உள்ளது. அவை விதிக்கப்பட்ட வரி வீதத்தை அல்லது அறிக்கையிடப்படும் திகதியில் கருத்திற்கொள்ள வேண்டிய அளவிலான வரி வீதத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன.

சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யப்படின் மாத்திரமே நடைமுறை வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் ஈடுசெய்யப்படுகின்றன.

ஆ. பிற்போடப்பட்ட வருமான வரி

பொறுப்பு முறையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்பட்டு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டுசெல்லும் அளவிற்கும் இடையேயான தற்காலிக வேறுபாடுகளின் வரித்தாக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு வரி நோக்கத்திற்காக அச் சொத்துக்களிற்கும் பொறுப்புகளிற்கும் சாட்டுதல் செய்யப்படுகின்றது.

ஏற்பாடு செய்யப்பட்ட பிற்போடப்பட்ட வரித் தொகை, அறிக்கையிடற் திகதியில் விதிக்கப்படும் வரி வீதங்களைப் பிரயோகித்து, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டு செல்லும் தொகை எதிர்பார்க்கப்படும் தேறக்கூடிய அல்லது தீர்விற்கான முறையை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்படுகின்றது. வருமான வரி இழப்புகளின் தற்காலிக வரி விளைவுகளையும், முன்னோக்கிக் கொண்டுசெல்லக் கூடிய செலவுகளையும் உள்ளடக்கிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் சொத்தைப் பயன்படுத்தக்கூடிய எதிர்கால வரி விதிப்பு இலாபங்கள் கிடைக்கக் கூடிய அளவிற்கு மாத்திரமே அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு நிதியாண்டின் போதும் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அது தொடர்பான வரிச் சலுகைகள் மேலும் கிடைக்க வாய்ப்பில்லாத வரையில் குறைக்கப்படுகின்றன.

**3.18 ஒரு பங்கிற்கான அடிப்படை வருமானம்**

கம்பனி, அதன் சாதாரண பங்குகளுக்கு ஒரு பங்கிற்கான அடிப்படை வருமானம் (ஈபீஎஸ்) தரவை வழங்குகின்றது. அடிப்படை ஈபீஎஸ் என்பது, கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்குக் கூறப்படும் இலாபம் அல்லது நட்டத்தை அக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட நிறையிட்ட சராசரி பங்குகளின எண்ணிக்கையால் வகுப்பதனால்
கணக்கிடப்படுகின்றது.

**4. காசுப் பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்று “ நேரில் முறை” அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட வட்டி செயற்பாட்டுக் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பெற்ற வட்டியும் பங்கிலாபமும் முதலீட்டுக் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை, செலுத்தப்பட்ட பங்கிலாபம் நிதிக் காசுப்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சற் கூற்றின் வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**5. ஒப்பீட்டுத் தகவல்**

சிறந்த முறையில் வெளிப்படுத்துவதற்காக, நடைமுறை ஆண்டின் வெளிப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக தேவைக்கேற்ற ஒப்பீட்டுத் தகவல்கள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**வரையறுக்கப்பட்ட ஓஷன் வியூ டிவெலப்மன்ட் (தனியார்) கம்பனி**
**நிதிக் கூற்றுக்களின் குறிப்பு**

**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது**

| | | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|---|
| **6.** | **வருமானம்** | | |
| | முதலீட்டு ஆதன வாடகை | 69,850,868 | 57,191,308 |
| | சேவைக் கட்டணங்கள் | 4,481,863 | 3,815,833 |
| | கோபுர வருமானம் | 36,392,411 | 34,833,361 |
| | தரிப்பிடக் கட்டணம் | - | 45,000 |
| | உபகரண அறை வருமானம் | 2,710,262 | 2,183,636 |
| | வீடுகள் விற்பனையிலிருந்தான வருமானம் | 17,251,078 | 38,500,000 |
| | காணி விற்பனை வருமானம் | 8,153,642 | - |
| | | **138,840,123** | **136,569,138** |
| **7** | **ஏனைய வருமானம்** | | |
| | முதலீட்டு ஆதன நியாயப் பெறுமதியிலான அதிகரிப்பு (குறிப்பு 14) | 189,365,160 | 391,419,086 |
| | சட்டக் கட்டணங்கள் | 904,914 | 2,229,718 |
| | எனைய வருமானம் | 104,747 | 6,230,005 |
| | சேத இழப்பு ஏற்பாட்டின் மீளல் | 4,448,390 | - |
| | | **194,823,211** | **399,878,809** |
| **8** | **இயற்கைச் செலவினங்கள்** | | |
| | செயற்படு இலாபத்தை அடைகையில் பின்வரும் விடயங்கள் சாட்டப்பட்டன. | | |
| | பெறுமானத்தேய்வுச் செலவினங்கள் | 3,176,797 | 3,186,711 |
| | அருவகச் சொத்துக்களின் காலக்கழிவு | - | - |
| | தனியாள் கிரயங்கள் **(குறிப்பு 08.1)** | 54,983,513 | 51,203,736 |
| | கணக்காய்வாளர்களின் கட்டணம் | 792,600 | 1,134,993 |
| | தனிப்பட்ட கட்டணங்கள் | 1,099,873 | 621,990 |
| | பணிப்பாளர் ஊதியம் | 3,491,000 | 2,675,000 |
| | தலைவரின் ஊதியம் | 1,460,845 | 1,434,390 |
| | சட்டக் கட்டணம் | 1,950,028 | 1,140,000 |
| | விற்பனை தரகுக் கட்டணம் | - | 100,000 |
| | காப்புறுதி | 1,576,876 | 1,599,648 |
| | அச்சிடலும் காகிதாதிகளும் | 1,345,819 | 1,102,970 |
| | செயற்திட்டச் செலவினங்கள் | 6,650 | 58,671 |
| | திருத்த வேலைகளும் பராமரிப்பும் (மின் உபகரணப் பராமரிப்பு, வாகன பராமரிப்பு, மின்தூக்கி உபகரணம்) | 3,282,740 | 3,095,780 |
| | களச் செலவினங்கள் | 2,031,431 | 3,600,512 |
| | போக்குவரத்துச் செலவினங்கள் | 1,464,356 | 2,123,353 |
| | பயன்பாட்டுச் செலவினங்கள் | 11,710,690 | 4,893,874 |
| | ஐயக் கடன் ஏற்பாடு | - | 6,378,310 |
| | ஏனைய செலவினங்கள் | 5,410,214 | 2,506,833 |
| | **மொத்த நிர்வாகச் செலவினங்கள்** | **93,783,430** | **86,856,771** |

**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது**

| | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|
| **விற்பனைக் கிரயம்** | | |
| விற்பனைக் கிரயம் - கஹதுடுவ வீட்டுச் செயற்திட்டம் | 7,161,407 | 27,957,040 |
| விற்பனைக் கிரயம் - கட்டிட திருத்த வேலைகள் | 10,646,785 | 15,033,298 |
| விற்பனைக் கிரயம் - பாதுகாப்புச் செலவினங்கள் | 4,149,119 | 4,093,000 |
| விற்பனைக் கிரயம் - காணி – மத்தெகொட | 2,919,158 | |
| மொத்த விற்பனைக் கிரயம் | **24,876,470** | **47,083,338** |
| மொத்த விற்பனைக் கிரயமும் நிர்வாகச் செலவினங்களும் | **118,659,901** | **133,940,109** |

8.1 **தனியாள் கிரயங்கள்**

| | | |
|---|---|---|
| **சம்பளங்களும் ஏனைய தொடர்புபட்ட கிரயங்களும்** | 47,655,708 | 45,552,857 |
| **ஊழியர் நலன்கள்** | 3,096,965 | 1,147,342 |
| **ஊழியர் சேமலாப நிதியம்** | 3,525,458 | 3,753,189 |
| **ஊியர் நம்பிக்கை நிதியம்** | 705,382 | 750,348 |
| | **54,983,513** | **51,203,736** |

| | 2023<br>ரூபா | 2022<br>ரூபா<br>திருத்தப்பட்டது |
|---|---|---|
| 9. **தேறிய நிதி (செலவினங்கள்)/ வருமானம்** | | |
| **நிதி வருமானம்** | | |
| வட்டி வருமானம்: | | |
| இலாப நட்டத்தினூடாக நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 57,195 | 40,970 |
| முதிர்விற்கான முதலீடுகள் | 10,567,194 | 11,118,810 |
| கடன்களும் பெறவேண்டியவையும் | 420,935 | 425,165 |
| | **11,045,324** | **11,584,945** |

ஆரம்ப அங்கீகாரத்தில் நியாயப் பெறுமதி இலாபம் அல்லது நட்டம் சீராக்கப்பட்ட முன்னர் நடப்பாண்டில் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளிலிருந்தான வட்டி வருமானம் ரூபா 420,935 ஆகவும் கடன் மீதிகள் ரூபா 3,750,691 ஆகவும் காணப்பட்டன. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட சந்தை விலையில் கழிப்பனவு மேற்கொள்ளப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி ரூபா 3,167,079 ஆகும். எனினும், முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த நடைமுறைக் கடன் மீதிக்கும் சந்தை விலையில் கழிப்பனவு மேற்கொள்ளப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 689,612 ஆகும். வேறுபாடு நடைமுறை நிதி ஆண்டின் போது ஓர் இலாபமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**நிதிக் கிரயங்கள்**

| | | |
|---|---|---|
| இலாப நட்டத்தினூடாக நியாயப்பெறுமதியில் கணிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியிலான அதிகரிப்பு/ (குறைவு) | (549) | (16,335) |
| குத்தகை மீதான வட்டி | (128,389) | (532,377) |
| | **(128,938)** | **(548,712)** |
| | **10,916,386** | **11,036,234** |

**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது**

| | | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|---|
| 10. | **வருமான வரி (செலவு)/ செலவுகள்** | | |
| | நடைமுறை வரி | 9,180,425 | 6,761,558 |
| | முன்னைய ஆண்டு (மிகை)/ குறை ஏற்பாடு (குறிப்பு 26) | 4,799,509 | (1,581,366) |
| | பிற்போடப்பட்ட வரிச் செலவு | 6,740,858 | (1,201,046) |
| | | **20,720,792** | **3,979,147** |

| | | 2023 | 2022 |
|---|---|---|---|
| 10.1 | **செலுத்த வேண்டிய வரியின் எண்ணியல் ரீதியான இணக்கம்** | | |
| | வரிக்கு முன்னைய இலாபம் | 225,919,819 | 413,544,071 |
| | அனுமதிக்கப்படாத செலவினக் கூட்டுத்தொகை | 5,819,289 | 9,389,977 |
| | ஏனைய வருமான வளங்களின் கூட்டுத்தொகை | (11,045,324) | (11,159,780) |
| | அனுமதிக்கக்கூடிய செலவினக் கூட்டுத்தொகை | (201,137,694) | (410,891,243) |
| | மொத்த நியதிச்சட்ட வருமானம்/ வியாபாரத்தில் இருந்து | 19,556,090 | 883,025 |
| | வியாபாரமற்ற வருமானம் | 11,045,324 | 11,159,780 |
| | மொத்த நியதிச்சட்ட வருமானம் | 30,601,414 | 12,042,805 |
| | காலப்பகுதியின் போது தீர்க்கப்பட்ட இழப்பு | - | - |
| | வரிவிதிக்கத்தக்க வருமானம் | 30,601,414 | 12,042,805 |
| | | | |
| | **வருமான வரி** @30% | 9,180,424 | 1,806,421 |
| | **வருமான வரி**@24% | - | 1,445,137 |
| | | 9,180,424 | 3,251,558 |

**வருமான வரி (செலவு)/ செலவுகள் (தொடர்ச்சி)**

| **திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **2023** | | **2022** | |
|---|---|---|---|---|
| | **தற்காலிக வேறுபாடு**<br>**ரூபா** | **வரித் தாக்கம்**<br>**ரூபா** | **தற்காலிக வேறுபாடு**<br>**ரூபா** | **வரித் தாக்கம்**<br>**ரூபா** |
| ஆதன, இயந்திர உபகரணங்களின் மீதானவை | (13,765,095) | (4,129,529) | (1,151,155) | (345,346) |
| ஊழியர் நலக் கடப்பாடுகளின் மீதானவை | 9,577,557 | 2,873,267 | 8,672,812 | 2,601,844 |
| | **(4,187,538)** | **(1,256,262)** | **7,521,657** | **2,256,498** |

பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பின் மாற்றம் பின்வருமாறாகும்

| | **2023**<br>**ரூபா** | **2022**<br>**ரூபா**<br>**திருத்தப்பட்டது** |
|---|---|---|
| ஆரம்ப பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 2,256,498 | 758,871 |
| இலாப நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | (6,740,858) | 1,201,046 |
| ஏனைய விபரமான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 296,822 | 296,581 |
| இறுதி பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | **(4,187,538)** | **2,256,498** |

## 11. தலா ஒரு பங்கிற்கான உழைப்பு

"தலா ஒரு பங்கிற்கான உழைப்பு" எல்கேஏஎஸ் 33 இன் தேவைக்கபாட்டிற்கமைவாக கம்பனியின் உரிமை மூலதன பங்குதாரர்களிற்கு பகிரக்கூடிய தேறிய இலாபத்தை ஆண்டின் போது வழங்கப்படும் சாதாரண பங்குளின் எண்ணிக்கையின் நிறையிடற் சராசரியால் பிரித்துக் கணிப்பிடப்படுகின்றது.

| திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கம்பனியின் உரிமை மூலதன பங்குதாரர்களிற்கு பகிரக்கூடிய தேறிய இலாபம் | 205,199,028 | 408,594,452 |
| வழங்கப்படும் சாதாரண பங்குளின் எண்ணிக்கையின் நிறையிடற் சராசரி | 21,200,402 | 21,200,402 |
| தலா ஒரு பங்கிற்கான உழைப்பு (ரூபா) | 9.68 | 19.27 |

### திசெம்பர் 31 இல் உள்ளவாறானது

12 ஆதன இயந்திர உபகரணங்கள்

| | இறையில் - மோட்டார் வாகனங்கள் | பயன்பாட்டு உரிமை கொண்ட சொத்துக்கள் | அலுவலக உபகரணங்கள் | அலுவலக தளபாடம் | பொறி இயந்திரங்கள் | மொத்தம் 2023 | மொத்தம் 2021 |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **கிரயம்** | | | | | | | |
| ஆரம்ப மீதி சனவரி 01 | 25,016,145 | 23,733,000 | 2,326,549 | 6,565,907 | 7,243,619 | **64,885,220** | 64,782,352 |
| சேர்ப்பனவுகள் | - | - | 185,000 | 315,900 | 34,280 | **535,180** | 102,868 |
| இறையில் சொத்துக்களுக்கு மாற்றப்பட்டவை | 23,733,000 | (23,733,000) | - | - | - | - | - |
